தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 59 மலர் : 11

உள்ளுறை

1. உரிச்சொல் குறைச்சொல்லாகுமா? 481

கன்னக்குறிச்சி வை. தங்கமணி
தமிழாசிரியர்
பி. கே. என். ஆண்கள் மேல்நிலைப்பள்ளி
திருமங்கலம்-626 706.

2. தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை 489

(சென்ற இதழ் தொடர்ச்சி)
பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

3. மலை முதல் மனை வரையிலும் கண்ட பல கடவுளர் 505

(சென்ற இதழ் தொடர்ச்சி)
மு. சண்முகம் பிள்ளை
சிறப்பு நிலைப் பேராசிரியர்
சுவடிப்புலம்-ஓலைச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

4. பெருமொழிச் சிந்தனை 513

(சென்ற இதழ் தொடர்ச்சி)
டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி,
எம். ஏ., எம். ஓ. எல். பி. எச். டி.
40, நைனியப்பன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-2.

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2016

துணர்: 59 குரோதன — மாசி மலர்: 11

பிப்ரவரி — மார்ச் 1986

"உரிச் சொல் குறைச் சொல்லாகுமா ?"

கன்னக்குறிச்சி வை. தங்கமணி
தமிழாசிரியர்
பி. கே. என். ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
திருமங்கலம் - 626 706.

"உரிச் சொல் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோற்றிப்
பெயரினும் வினையினும் மெய் தடுமாறி

ஒருசொற் பலபொருட்கு உரிமை தோற்றினும்
பலசொல் ஒருபொருட்கு உரிமை தோற்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்று நிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள் வேறு கிளத்தல்''

தொல் : சொல் : உரி : 1.

இந்த உரியியல் முதல் நூற்பாவிற்குச் சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் முதலிய மூவரும் ஒரே மாதிரி உரை எழுதிச் செல்வர். ஆனால் தெய்வச்சிலையார் மட்டும் உரைக்குப்பின் விளக்கந்தரும் முகத்தான்'' எழுத்ததிகாரத்தில் இதனைக் குறைச் சொல் கிளவி என்று ஓதினமையால் வட நூலாசிரியர் 'தாது' என்று குறிப்பிட்ட சொற்களே இவையென்று கொள்ளப்படும். அவையும் குறைச் சொல்லாதலான்'' என்றார்.

வட நூலாசிரியர் 'தாது' என்ற சொல் 'குறைச் சொல்' என்று கூறினால் தொல்காப்பியர் கூறிய உரிச் சொல்லையும் 'குறைச் சொல்' என்று கூறவேண்டும் என்பது என்ன வழக்கு பற்று, தொல்காப்பியர் தமிழ்மொழிக்கன்றோ இலக்கணம் வகுத்துள்ளார்.

எழுத்ததிகாரத்தில் :

''உயிரும் புள்ளியும் இறுதியாகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினும் தோற்றி
நெறிப்பட வாராக் குறைச் சொற்கிளவி'' —

என்று ஓதினமையால் உரிச்சொல் 'குறைச்சொல்' ஆகுமா ? 'குறைச்சொல் கிளவி' உரிச்சொல் என்றால் 'குறையென் கிளவி'[1] (தொகை மரபு. 24) என்று கூறி இருப்பதனையும் 'குறைச் சொற்கிளவி'[2] (எச் : 57) என்று கூறியிருப்பதனையும் உரிச்சொல் என்றன்றோ கூறியிருக்க வேண்டும். அவ்வாறு கூறாது குறையென் கிளவி யென்றால் குறை என்ற சொல் (கலக்குறை, படிக்குறை) ஈறாக உடையது என்றும், 'குறைச்சொற் கிளவி' என்றால் தாமரை என்பதை 'மரை' என்றும், 'ஓந்தி' என்பதை 'ஓதி' என்றும், 'நீலம்' என்பதை

1. 'குறையென் கிளவி முன்வருகாலை நிறையத் தோன்றும் வேற்றுமை யியற்கை' தொல் : எழுத்து : 166.
2. 'குறைச்சொல் கிளவி குறைக்கும் வழி அறிதல்' தொல் : சொல் : 453

'நீல்' என்றும் 'முதல், இடை, கடை' குறையாகவும் கொள்ள வேண்டும் என்று வேறு வேறு பொருளினைத் தந்துவிட்டு உரிச்சொல்லின் பொது இலக்கணம் உணர்த்தும் நூற்பாவில் 'இசையினும் குறிப்பினும் பண்பினும் தோற்றி' என்று கூறியதால் எழுத்ததிகாரத்தில் (தொகை மரபு : 24) கூறிய தொடரினை ஒப்பிட்டுக் காட்டி 'குறைச்சொல் கிளவி' உரிச்சொல் என்று கூறுவது பொருந்துவதுதான் !

'குறிப்பினும் பண்பினும் இசையினும் தோற்றி' என்று எழுத்ததிகாரத்திலும் (166)' இசையினும் குறிப்பினும் பண்பினும் தோற்றி' என்று உரிபியலிலும் (1) வகுத்துக் காட்டு வார்.

எழுத்ததிகாரத்தில் 'குறிப்பினும்' என்ற சொல்லை முன் வைப்பார். உரியியலில் 'இசையினும்' என்ற சொல்லை முன் தருவார்.

'நெறிப்பட வாராக் குறைச்சொல் கிளவி' என்று கூறுவார் எழுத்ததிகாரத்தில். 'பெயரினும் வினையினும் மெய்தடுமாறி' என்று பேசுவார் உரியியலில். இரண்டும் ஒன்றாகுமா ?

நெறிப்பட வாராச் சொல்லும், பெயரினும் வினையினும் மெய் தடுமாறி வரும் சொல்லும் 'உரிச்சொல்' எனலாமா ? எவ்வாறு ஏற்புடைத்தாகும். வேறு வேறு என்பது தெரிய வில்லையா ?

தற்கால மொழியியல் அறிஞர்களுள் முதன்மை வகிக்கும் திரு தெ. பொ. மீ. அவர்கள் (1) முழுச்சொற்கள் குறைச் சொற்கள் என்று பிரித்து, முழுச்சொற்கள்: பெயர்வினை என்றும், குறைச்சொற்கள்: இடைஉரி என்றும், இவைகளை ஒன்றாக்கிக் குழப்பக்கூடாது என்பார். (இ. ஆ. க. பக். 123) அடிச்சொல்லாம் உருபன் (contentives) வருவதால் உரிச்சொல் எனப்படும் என்றும்,

அடிச்சொல் அல்லாத பிற உருபன் (functors) அடிச் சொல்லாக மற்று, அ.இ.எ. வந்தாலும் அவற்றிற்கு இலக்கணப் பொருளன்றி வேறுபொருள் இன்மையால் இடைச் சொல் எனப்படும் என்று முழுச்சொல்லுக்கும் குறைச்சொல்லுக்கும் விளக்கம் தருவார். (ஷை பக். 122)

---

1. இலக்கண ஆய்வுக்கட்டுரை: பாகம்: 1
அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு.

தொடர்ந்து மேல் நாட்டினர் உருபன்களை (Morpheme) ஒன்றாக்கிக் காட்டுவார்கள் (டி பக் 122) ஆனால் ஐரோப்பிய மொழி நூலாசிரியர்கள் அடிச்சொற்களை பொருளுடைய உருபன் (Semanteme) என்றும் (இதனை உரிச்சொல் என்பார்) இடைச்சொற்களாகிய (Morpheme) இடைநிலை, விகுதி முதலியவற்றை வழங்கி வந்ததும் உண்டு என்றும் (டி பக். 122) கூறுவார்.

2. திரு சி. இலக்குவனார் அவர்கள் சொல் பிறப்பதற்கு உரியசொல் உரிச்சொல்' என்பது மிகப்பொருத்தம் என்பார். (1961. ப. 108-109)

3. பேராசிரியர்க. வெள்ளை வாரணனார் 'உரிச்சொல் எனப்பட்டது' வினையும் குறிப்புமாகிய சொற்களுக்கெல்லாம் பகுதியாகிய வேர்ச்சொற்கள் என்பதும், குறைச்சொற்களாகிய இவற்றைக்கொண்டே எல்லா வினைச் சொற்களும் தோன்றுவன என்பதும் இனிது புலனாதல் காண்க' என்பார். (1970: ப. 66)

4. திரு ச. சாம்ப சிவனார் 'பண்பினும் தோற்றி' என உரிச்சொல்லின் இலக்கணம் ஓதியமையால் நட, வா, முதலான முதனிலைகளும் உரிச்சொற்கள் என்றே கொள்ளப்படும். (பக். 115) என்று கூறியவர் தொடர்ந்தாற்போல் பெயர்ச் சொற்களை எண்ணும் போது சில உரிச்சொற்களைப் பகுதி யாகக் கொண்டு சில பெயர்ச்சொற்கள் தோன்றலாம். ஆனால் பெயர்ச்சொற்களின் பகுதிகள் அனைத்துமே உரிச்சொல் எனல் பொருந்துமா? என்பது ஆய்வுக்குரியது என்பார். (பக். 115)

தமிழ்மொழிக்குத் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார் என்பதனையும் அவரது நோக்கினையும் போக்கினையும் மறந்து

சொற்களை முழுச்சொல் என்றும், குறைச்சொல் என்றும் பகுத்து-குறைச்சொல்லைப் பொருள் தருவது என்றும், இலக்கணப்பொருள் தருவது என்றும் - மேல் நாட்டினர்

---

2. தொல்காப்பிய ஆராய்ச்சி. சி. இலக்குவனார். வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை. 1961.

3. தொல்காப்பியம். க. வெள்ளைவாரணன் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1970.

4. இலக்கண ஆய்வுக்கட்டுரை. பாகம், 1. அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.

உருபன்களை (Mor Pheme) ஒட்டுமொத்தமாக ஒன்றாக்கிக் காட்டுவர். ஆனால் ஐரோப்பிய மொழியியல் ஆசிரியர்கள் உரிச்சொல்லைப் பொருளுடைய அடிச்சொல் உருபன் (Semanteme) என்றும் இடைநிலை, விகுதி முதலிய இடைச் சொற்களை (Morpheme) என்றும் கூறுவார்கள் என்று திரு தெ. பொ. மீ. அவர்கள் கூறுவார்கள்

மேல் நாட்டினர் ஒன்றாக்குவதை - ஐரோப்பியர் இரண்டாக்குவர். வெளிநாட்டினருக்குள்ளேயே ஒற்றுமை இல்லை. வேற்றுமையே மிகுந்துள்ளது. இவ்வாறு முரண் பட்ட கருத்துடைபவர்களின் எண்ணங்கள் எவ்வாறு தமிழ் மொழிக்குப் பொருந்தும். இஃது முழந்தாளுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சிப் போடுதல் ஆகாதா? மேலை நாட்டினர் கூற்று வேண்டுமானால் அவர்கள் நாட்டு மொழிகளுக்குப் பொருந்தலாம் - தமிழ்மொழிக்குப் பொருந்துமா?

திரு சி. இலக்குவனார், திரு க. வெள்ளை வாரணனார், திரு ச. சாம்ப சிவனார் முதலானோர். எல்லா வினைச் சொற்களும் தோன்றுவதற்குக் காரணம் இவ்வுரிச்சொற்களே என்று முடிவாகக் காட்டுவார்கள்.

இவர்களில் திரு ச. சாம்ப சிவனார் சில உரிச்சொற்களை பகுதியாகக் கொண்டு சில பெயர்ச் சொற்களின் பகுதிகள் அனைத்தும் உரிச்சொல் என்பது பொருத்துமா? ஆய்வுக் குரியது என மறுப்பும் தருவார்.

வினைச் சொல்லின் பகுதிகள் அனைத்தும் சொல்லின் முழுப்பொருளைத் தருவதுபோல் அமைந்து ஏவல் பொருளில் வருவதல்லவா? அவ்வாறிருக்க வினையின் பகுதியை உரிச்சொல் என்பது எவ்வாறு பொருந்தும்

வினையின் பகுதியில் இருந்து சொல்பிறக்கும். ஆனால், 'மல்லல், ஏ, மே, தட, ஐ, வை' போன்ற உரிச் சொற்களில் எவ்வாறு சொல் பிறக்கும்.

'நடந்தார், வந்தார்' என்ற வினைகளிடல்
'நட, வா' என்பவைகள் பகுதிகள்
'கண்ணன், பொன்னன்' என்ற பெயர்களிடல்
'கண், பொன்' என்பவைகள் பகுதிகள்
'மற்று, சொல், உம்' முதலியவைகள் இடைச்சொற்கள்
'உறு, ஐ, கறுப்பு' முதலியவைகள் உரிச்சொற்கள்,

நட, வா, கண், பொன், மற்று, சொல், உம், உறு, ஐ, கறுப்பு முதலியவைகள் ஒன்றாகுமா? வினைப்பகுதி என்றும், பெயர்ப்பகுதி என்றும், இடைச்சொல் என்றும், உரிச்சொல் என்றும் வெவ்வேறாகத் தெரியவில்லையா? இவைகளை ஒன்றாக்கிட வேற்று மொழிக் கருத்துக்களைக் கொண்டு குழப்பலாமா? பொருந்துமா? ஒவ்வொன்றும் தனித்தனி முத்திரையோடு திகழவில்லையா?

ஆக இதுகாறும் உரையாசிரியர் கருத்துகளையும், தற்கால மொழியியல் அறிஞர்களின் கருத்துகளையும் எடுத்துக்காட்டி—உரிச்சொல் குறைச்சொல்லுமல்ல-பகுதிச் சொல்லுமல்ல-'உரிச்சொல்' தனியானது என்று கண்டோம்.

துணை நின்ற நூல்கள் :

1. தொல் : எழுத்து : இளம்பூரணம். கழகப்பதிப்பு.
2. தொல் : எழுத்து : நச்சினார்க்கினியம்.
   தஞ்சை சரஸ்வதி மகால் நூல்நிலையம், தஞ்சாவூர்.
3. தொல் : சொல் : சங்கரநமச்சிவாயர் உரை
   கழகப்பதிப்பு
4. தொல் : சொல் : தெய்வச்சிலையார் : கழகப்பதிப்பு.
5. தொல் : சொல் : நச்சினார்க்கினியம். கழகப்பதிப்பு.
6. இலக்கண ஆய்வுக்கட்டுரை. பாகம் : 1.
   அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு.
7. தொல்காப்பிய ஆராய்ச்சி. சி. இலக்குவனார்.
   வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை.
8. தொல்காப்பியம் க. வெள்ளை வாரணனார்.
   அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு.

பதிப்பாசிரியர் குறிப்பு : உரியியற் சூத்திரம்

"இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி"

எனவுளது. இக்கட்டுரையாளர் 'தோற்றி' எனப் பாடங் கொண்டுள்ளார். தோன்றினும் என வருவனவற்றிற்கும் தோற்றினும் எனக் கொண்டுள்ளார்.

உரிச்சொல் – குறைச்சொல் - இவை பற்றிய விளக்கம் கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடாகிய "கட்டுரைப்பூங்கா" என்னும் கட்டுரைத் தொகுப்பில் 'உரிச்சொல்' என்னும் தலைப்பில் கூறபட்ப்டுள்ளது.

தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு

'தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு' எனத் தலைப்பிட்ட பாடல் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் அற்புதமான குழந்தைப் பாடல் ஆகும். பசுவைச் செல்வமாகக் கருதுவது நம் மரபு. பசுக்களை அருளாளர்களாகப் பழங்கால ருஷியர்களும் கருதினர். மன்னனுக்கு அடுத்தபடியாகப் பசுக்களைப் போற்றி மகிழ்ந்தனர் கிழக்காப்பிரிக்க மக்கள். நம் வீட்டில் உள்ள பசுக்களைப் பற்றி நமக்குத் தெரியாத செய்திகள் பல உள்ளன. 'யூனி நாததுராலிஸ்த்' இதழ் பசுக்களைப் பற்றிய பல செய்திகளைத் தெரிவிக்கின்றது.

காட்டு எருது, பசு முதலிய கால்நடைகளை வீட்டு விலங்குகளாக முதன் முதலில் பயிற்றுவித்த பெருமை 8000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இந்தியர்களுக்குரியது.

2000 ஆண்டுகளுக்கு முன்பு பசுக்கள் மிகவும் உயரமாக இருந்தன. மனிதர்கள் நின்றுகொண்டுதான் பால் கறந்தனர்.

பசுக்களின் கலப்பினமுறை 18-ஆம் நூற்றாண்டில் தான் தொடங்கியது. இந்த முறையைக் கண்டுபிடித்தவர் ராபர் பாக்வெல் என்ற பிரிட்டிஷ் விஞ்ஞானி ஆவார். தற்போது 960 வகை கால்நடைப் பெருக்கு முறைகள் உள்ளன.

சாதாரணமாக ஒரு நல்ல பசு ஒரு நாளைக்கு 15-20 கி. கிராம் பாலை உற்பத்தி செய்கிறது. இது ஓராண்டில் 280-320 நாட்களுக்குப் பால் தருகிறது.

நல்ல ஊட்டமுள்ள பசுக்கள் தமது மூன்றாவது நான்காவது வயதில் 500-600 கி. கிராம எடை இருக்கும். சாதாரணமாகப் பசுக்கள் 20 ஆண்டுகள் வாழும். இதில், 12/13 ஆண்டுகளுக்குப் 'பால் ஆலை'யாகப் பயன் தருகிறது. பெரும்பாலும் ஓர் ஆண்டுக்கு ஒரு கன்றுதான் ஈனும். மிக அரிதாக மூன்று முதல் ஏழு கன்றுகள் வரை ஈனும்.

சிவப்பு நிறம் பசுவை மிரட்டும் என்பர். இது உண்மையன்று. வெள்ளை நிறத்தைத் தவிர எந்த நிறத்தையும் பிறித்தறியும் திறமை பசுவுக்கு இல்லை. பசுவின் மோப்ப சக்தியும் அவ்வளவு வளர்ச்சியடைந்தாகச் சொல்ல முடியாது. புல்லைத் தின்னும் முன் நிலத்தை மிகக் கவனமாக மோந்து பார்க்கும். மண்ணில் தாது உரம் இருப்பின், அங்குள்ள

புல்லைத் தின்னாது. பசுவுக்கு உப்பு மிகவும் பிடிக்கும் என்று சொல்லப்படுகிறது. தன் உடம்பிலுள்ள உப்புச்சத்து குறையும் போதுதான் அது அதிக உப்பை விரும்புகிறது. மற்றபடி, அதற்கு விருப்பமானது இனிப்புத்தான்.

பசு 1.5 மீட்டர் உயரமுள்ள வேலியைத் தாண்டும். ஆபத்து நெருங்கும்போது மணிக்கு 40 கி.மீ. வேகத்தில் 'கொம்புதெறிக்க' ஓடும்.

நமது சர்க்கஸில் நாய் செய்யும் சில வேலைகளைச் சோவியத் சர்க்கஸில் பசுக்கள் செய்கின்கின. அங்கு அவை பந்தாடுகின்றது ; ஸ்கூட்டர் ஓட்டுகின்றன ; பாலே நடன மாடுகின்றன.

பசு ஏற்ற இறக்கமில்லாத குரலில் ஒரே மாதிரியாகக் கத்துவது போலத் தோன்றுகிறதல்லவா? அது உண்மையன்று. பசு 11 வகைப் பொருளுடைய குரலில் கத்துகிறது. தனது கன்றுகுட்டியோடு தொடர்பு கொள்ளவிருப்புப்போது, அது வெவ்வேறு 'குரல் அளவை'ப் பயன்படுத்துகிறது. இசையின் ஒலி நயத்திற்கு ஏற்ப, அதைப் பிரித்தறியும் இயல்பும் பசுவுக்குண்டு. மெல்லிய இசை ஒலிக்குப்போது, அருகில் நின்று கேட்கும் (கண்ணனின் குழலோசைக்குப் பசுக்கள் மயங்கியது உண்மைதான் போலும்!)

பசுவிற்கு நல்ல தீவனம் வேண்டும். அது ஒரு நாளைக்கு 100-130 லிட்டர் தண்ணீர் குடிக்கும். இதில் 80-100 லிட்டர் தண்ணீர் தீவனத்தை அசைபோடும்போது ஊறும் எச்சிலுக்குத் தேவைப்படுகிறது.

உலகில் தற்போது 20 கோடி பசுக்கள் (23 பேருக்கு ஒரு பசு வீதம்) இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர்.

''நன்றி அறிவியல் பண்ணை' தமிழ்ப் பல்கலைக் கழகம்''

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

நிரைபு நிரைபு நேர்	—	களிறு வழங்குவாய்	— 5	,,
		உருமு குலவு வாய்	— 7	,,
		களிறு குலவு வாய்	— 6	,,
		உருமு வழங்குவாய்	— 6	,,

நிரையீற்று வஞ்சியுரிச்சீர் – 16,

உதாரணம் – 36, இவை 4 - 8 எழுத்து

நேர் நேர் நிரை	—	மாசேர் சுரம்	— 4	—எழுத்து
நேர் நிரை நிரை	—	மாவருசுரம்	— 5	,,
நேர் நேர்பு நிரை	—	மாபோகுசுரம்	— 4	,,
		மாபேணுசுரம்	— 5	,,
நேர் நிரைபு நிரை	—	மா வழங்குசுரம்	— 5	,,
		மா உருமு சுரம்	— 6	,,
நிரை நேர் நிரை	—	புலி சேர் சுரம்	— 5	,,
நிரை நிரை நிரை	—	புலி வரு சுரம்	— 6	,,
நிரை நேர்பு நிரை	—	புலி போகு சுரம்	— 5	,,
		புலி பேணு சுரம்	— 6	,,
நிரை நிரைபு நிரை	—	புலி வழங்கு சுரம்	— 6	,,
		புலி உருமு சுரம்	— 7	,,
நேர்பு நேர் நிரை	—	பாம்பு சேர்சுரம்	— 4	,,
		மின்னு சேர்சுரம்	— 5	,,
நேர்பு நிரை நிரை	—	பாம்பு வருசுரம்	— 5	,,
		மின்னு வருசுரம்	— 6	,,
நேர்பு நேர்பு நிரை	—	பாம்பு போகுசுரம்	— 4	,,
		மின்னு மேவுசுரம்	— 6	,,
		பாம்பு மேவுசுரம்	— 5	,,
		மின்னுப் போகுசுரம்	— 5	,,
நேர்பு நிரைபு நிரை	—	பாம்பு வழங்குசுரம்	— 5	,,
		மின்னுப் பரவு சுரம்	— 7	,,
		மின்னு வழங்கு சுரம்	— 6	,,
		பாம்பு விரவுசுரம்	— 6	,,
நிரைபு நேர் நிரை	—	களிறு சேர் சுரம்	— 5	,,
		அரவு சேர் சுரம்	— 6	,,
நிரைபு நிரை நிரை	—	களிறு வருசுரம்	— 6	,,
		அரவு வருசுரம்	— 7	,,
நிரைபு நேர்பு நிரை	—	களிறு போகுசுரம்	— 5	,,
		அரவு பேணுசுரம்	— 7	,,
		களிறு பேணுசுரம்	— 6	,,
		அரவு போகுசுரம்	— 6	,,

நிரைபு நிரைபு நிரை —	களிறு வழங்குசுரம்	— 6	,,
	அரவு குலவுசுரம்	— 8	,,
	களிறு குலவுசுரம்	— 7	,,
	அரவு வழங்குசுரம்	— 7	,,

நேர்பீற்று வஞ்சியுரிச்சீர்கள் - 16,

உதாரணம் — 72, இவை 3 - 8 எழுத்துவரை வரும்

நேர் நேர் நேர்பு —	மாசேர் காடு	— 3	,,
	மாசேர் காவு	— 4	,,
நேர் நிரை நேர்பு —	மாவருகாடு	— 4	,,
	மாவருகாவு	— 5	,,
நேர் நேர்பு நேர்பு —	மா போகுகாடு	— 3	,,
	மா பேணுகாவு	— 5	,,
	மா போகுகாவு	— 4	,,
	மா பேணுகாடு	— 4	,,
நேர் நிரைபு நேர்பு —	மாவழங்குகாடு	— 4	,,
	மாஉலவு காவு	— 6	,,
	மாவழங்குகாவு	— 5	,,
	மாஉலவு காடு	— 5	,,
நிரை நேர் நேர்பு —	புலிசேர் காடு	— 4	,,
	புலிசேர் காவு	— 5	,,
நிரை நிரை நேர்பு —	புலிவருகாடு	— 5	,,
	புலிவருகாவு	— 6	,,
நிரை நேர்பு நேர்பு —	புலிபோகுகாடு	— 4	,,
	புலிபேணுகாவு	— 6	,,
	புலிபோகுகாவு	— 5	,,
	புலிபேணுகாடு	— 5	,,
நிரை நிரைபு நேர்பு —	புலிவழங்குகாடு	— 5	,,
	புலிஉலவு காவு	— 7	,,
	புலிவழங்குகாவு	— 6	,,
	புலிஉலவுகாடு	— 6	,,
நேர்பு நேர் நேர்பு —	பாம்புசேர்காடு	— 3	,,
	மின்னுசேர்காவு	— 5	,,
	பாம்புசேர் காவு	— 4	,,
	மின்னுசேர்காடு	— 4	,,
நேர்பு நிரை நேர்பு —	பாம்பு வருகாடு	— 4	,,
	மின்னுவருகாவு	— 6	,,
	பாம்பு வருகாவு	— 5	,,
	மின்னுவருகாடு	— 5	,,

நேர்பு நேர்பு நேர்பு —	பாம்பு போகு காடு	— 3	,,
	மின்னு மேவு காவு	— 6	,,
	பாம்பு மேவு காடு	— 4	,,
	மின்னு மேவு காடு	— 5	,,
	பாம்பு போகு காவு	— 4	,,
	மின்னு போகு காவு	— 5	,,
	பாம்பு மேவு காவு	— 5	,,
	மின்னு போகு காடு	— 4	,,
நேர்பு நிரைபு நேர்பு —	பாம்பு வழங்குகாடு	— 4	,,
	மின்னு விரவு காவு	— 7	,,
	பாம்பு வழங்கு காவு	— 5	,,
	மின்னு வழங்கு காவு	— 6	,,
	பாம்பு விரவு காவு	— 6	,,
	மின்னு விரவு காடு	— 6	,,
	பாம்பு விரவு காடு	— 5	,,
	மின்னு வழங்கு காடு	— 5	,,
நிரைபு நேர் நேர்பு —	களிறு சேர் காடு	— 4	,,
	அரவுசேர் காடு	— 6	,,
	களிறுசேர் காவு	— 5	,,
	அரவுசேர் காடு	— 5	,,
நிரைபு நிரை நேர்பு —	களிறுவருகாடு	— 5	,,
	அரவுவருகாவு	— 7	,,
	களிறுவருகாவு	— 6	,,
	அரவுவருகாடு	— 6	,,
நிரைபு நேர்பு நேர்பு —	களிறு போகுகாடு	— 4	,,
	அரவு பேணுகாவு	— 7	,,
	களிறு பேணுகாடு	— 5	,,
	அரவு பேணுகாடு	— 6	,,
	களிறு போகுகாவு	— 5	,,
	அரவு போகுகாவ	— 6	,,
	களிறு பேணுசாவு	— 6	,,
	அரவு போகுகாடு	— 5	,,
நிரைபு நிரைபு நேர்பு —	களிறு வழங்குகாடு	— 5	,,
	அரவு விரவு காவு	— 8	,,
	களிறு விரவு காவு	— 7	,,
	அரவு விரவு காடு	— 7	,,
	களிறு வழங்குகாவு	— 6	,,

	அரவு வழங்கு காவு	— 7	,,
	களிறு விரவுகாடு	— 6	,,
	அரவு வழங்குகாடு	— 6	,,

நிரைபீற்றுவஞ்சியுரிச்சீர் - 16.

உதாரணம் - 72, இவை 4 - 9 எழுத்து வரை வரும்.

நேர் நேர் நிரைபு —	மாசேர் கடறு	— 4	,,
	மாசேர் புறவு	— 5	,,
நேர் நிரை நிரைபு —	மாவரு கடறு	— 5	,,
	மாவரு புறவு	— 6	,,
நேர் நேர்பு நிரைபு	மாபோகுகடறு	— 4	,,
	மாபேணுபுறவு	— 6	,,
	மாபேணுகடறு	— 5	,,
	மாபோகு புறவு	— 5	,,
நேர் நிரைபு நிரைபு —	மாவழங்கு கடறு	— 5	,,
	மாவிரவு புறவு	— 7	,,
	மாவிரவு கடறு	— 6	,,
	மாவழங்கு புறவு	— 6	,,
நிரை நேர் நிரைபு	புலிசேர் கடறு	— 5	,,
	புலிசேர் புறவு	— 6	,,
நிரை நிரை நிரைபு —	புலிவருகடறு	— 6	,,
	புலிவருபுறவு	— 7	,,
நிரை நேர்பு நிரைபு —	புலிபோகுகடறு	— 5	,,
	புலிபேணுபுறவு	— 7	,,
	புலிபோகுபுறவு	— 6	,,
	புலிபேணுகடறு	— 6	,,
நிரை நிரைபு நிரைபு —	புலிவழங்குகடறு	— 6	,,
	புலிவிரவு புறவு	— 8	,,
	புலிவழங்குபுறவு	— 7	,,
	புலிவிரவுகடறு	— 7	,,
நேர்பு நேர் நிரைபு —	பாம்புசேர் கடறு	— 4	,,
	மின்னுச்சேர் புரவு	— 6	,,
	பாம்புசேர் புரவு	— 5	,,
	மின்னுச்சேர் கடறு	— 5	,,

நேர்பு நிரை நிரைபு —	டாப்புவருகடறு	— 5	,,
	மின்னுவருபுறவு	— 7	,,
	மின்னுவருகடறு	— 6	,,
	பாம்புவருபுறவு	— 6	,,
நேர்பு நேர்பு நிரைபு —	பாம்பு போகுகடறு	— 4	,,
	மின்னு நாணுபுறவு	— 7	,,
	பாம்பு போகுபுறவு	— 5	,,
	மின்னு நாணுகடறு	— 6	,,
	பாம்பு நாணுகடறு	— 5	,,
	மின்னு போகுகடறு	— 5	,,
	பாம்பு நாணுபுறவு	— 6	,,
	மின்னுபோகுபுறவு	— 6	,,
நேர்பு நிரைபு நிரைபு —	பாம்பு வழங்குகடறு	— 5	,,
	மின்னு விரவுபுறவு	— 8	,,
	பாம்பு வழங்குபுறவு	— 6	,,
	மின்னு வழங்குகடறு	— 6	,,
	பாம்பு விரவுபுறவு	— 7	,,
	மின்னு விரவுகடறு	— 7	,,
	பாம்பு விரவுகடறு	— 6	,,
	மின்னு வழங்குபுறவு	— 7	,,
நிரைபு நேர் நிரைபு —	களிறு சேர்கடறு	— 5	,,
	அரவு சேர்புறவு	— 7	,,
	களிறு சேர்புறவு	— 6	,,
	அரவு சேர்கடறு	— 6	,,
நிரைபு நிரை நிரைபு —	களிறு வருகடறு	— 6	,,
	அரவு வருபுறவு	— 8	,,
	களிறு வருபுறவு	— 7	,,
	அரவு வருகடறு	— 7	,,
நிரைபு நேர்பு நிரைபு —	களிறு போகுகடறு	— 5	,,
	அரவு நாணுபுறவு	— 8	,,
	களிறு நாணுகடறு	— 6	,,
	அரவு போகுபுறவு	— 7	,,
	களிறு நாணுபுறவு	— 7	,,
	அரவு நாணுகடறு	— 7	,,
	களிறு போகுபுறவு	— 6	,,
	அரவு போகு கடறு	— 6	,,

நிரைபு நிரைபு நிரைபு —	களிறு வழங்குகடறு	— 6	,,
	அரவு விரவுபுறவு	— 9	,,
	களிறு விரவுகடறு	— 7	,,
	அரவு வழங்குபுறவு	— 8	,,
	களிறு விரவுபுறவு	— 8	,,
	அரவு விரவுகடறு	— 8	,,
	களிறு வழங்குபுறவு	— 7	,,
	அரவு வழங்குகடறு	— 7	,,

வஞ்சியுரிச்சீர் நாலெழுத்து முதல் ஒன்பது எழுத்து வரை வரும். இவற்றுள் எட்டெழுத்து ஒன்பதெழுத்துச்சீர்கள் அருகியன்றிவாரா என அறிக. இவை யாவும் மூன்றுமுதல் ஆறெழுததுக்களுள் அடங்கும் என அறிக.

சூ. 21 : தன்பா அல்வழித் தானடை வின்றே

கருத்து : வஞ்சியுரிச்சீர்கள் பாக்களுள் வரும் நிலைமை கூறுகின்றது.

உரை : வஞ்சியுரிச்சீர்கள் வஞ்சிச்சீர்களுக்கு உரிமையுடையதாகிய வஞ்சிப்பா அல்லாத பிற பாக்களுள் ஓரடியுள் ஒன்றனபின் ஒன்றாக அடைவுபெற்று வருதலின்று. தன் பாவாயின் அடைவு பெற்றுவரும் என்றவாறு.

தன்பா அல்வழி எனப் பொதுப்படக் கூறினார், ஏற்புழிக் கோடலான் தனக்கு முதலாகிய ஆசிரியப்பாவினுள் ஒரோவழி வஞ்சியுரிச்சீர் அடைவுபெற்று வருமெனக் கோடற்கென்க. "அடைவின்றே" எனப் பாடங்கொண்டாராயினும் நச்சினார்க்கினியர் ஏனை உரையாசிரியன்மாரை ஒத்து வஞ்சியுரிச்சீர்கள், ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பாக்களுள் வாரா என்றே உரை கூறினார்.

வஞ்சியுரிச்சீர்களுள் சில சான்றோர் செய்த ஆசிரியப்பாக்களுள் பயின்றுவருதலானும், ஆசிரியர்

அந்நிலை மருங்கின் வஞ்சியுரிச்சீர்
ஒன்றுதலுடைய ஓரோரு வழியே (சூத்.)

எனக் கூறுதலானும்

குறளடி முதலா அளவடி காறும்
உறழ்நிலையிலவே வஞ்சிக்கென்ப (சூத்.)

என ஓதி நெடிலடி முதலியவற்றுள் உறழும் எனக் கொள்ள வைத்தமையானும் அவர்தம் கருத்து ஒவ்வு மாறில்லை எனத் தெரிக.

ஆசிரியத்துள் வஞ்சியுரிச்சீர் வருமாறு :-

விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே (குறு 210)
மத்துக் கயி றாடா வைகற்பொழுது நினையூஉ (பதி-8)
முழவிமிழ் மூதூர உர்விழவுக்காணூஉப் பெயரும் (பதிற்-60)
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை ஒருகை
(முருகு-109)
நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு (சிறுபா-125)

பிறவும் அன்ன.

சூ. 22 : வஞ்சிமருங்கின் எஞ்சிய உரிய

கருத்து : வஞ்சிப்பாவினுள் பிறசீர்கள் மயங்கி வருமென் கின்றது.

உரை : வஞ்சிப்பாவின்கண் தன்சீர்களொடு எஞ்சிய இயற்சீரும் ஆசிரிய உரிச்சீரும், வெண்சீரும் வருதற்குரியவாகும்.

(எ-டு) திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவின்
புட்டேம்பப் புயன்மாறி (பட்டினப்பாலை)
களிறு கடை இயதாள் (புறம் 7)
அரிமயிர்த் திரள்முன்கை (புறம் 7)
வாலிழை மடங்கையர் எனவரும்.

வரினும் வஞ்சியோசையே நிகழுமாறு இசையொடு சேர்த்தி உணர்த்தல் வேண்டுமென்க.

சூ. 23 : வெண்பா உரிச்சீர் ஆசிரிய உரிச்சீர்
இன்பா நேரடிக் கொருங்குநிலை யிலவே

கருத்து : ஆசிரியப்பாவின்கண் நிற்கும் சீர்களைப்பற்றிய தோரியல்பு கூறுகின்றது.

உரை : வெண்பா உரிச்சீரும் ஆசிரியஉரிச்சீரும் ஆசிரியப் பாவின் ஒரடியின்கண் ஒருங்குநிற்றலில்லை.

எனவே இயற்சீர்களின் இடையிடையே தனித்தனி நிற்கப் பெறும் என்றவாறாம். நேரடி என்றது பத்து முதல் பதினான்கெழுத்தளவும் உள்ள அடிகளை - நேரடிக்கு ஒருங்கு நிற்றலில்லை என்றதனால் நெடிலடி கழிநெடிலடிக்கண் சிறுபான்மை ஒருங்குநிற்கப்பெறும் எனக் கொள்க.

இயலசைகளான் வரும் சீர்களை இன்சீர் என்றாற்போல இயற்சீர்களான்வரும் ஆசிரியத்தினை இன்பா என வழங்குதல் தொன்னூலோர் மரபு என்பது தோன்ற ஆசிரியப்பா என்னாது இன்பா என்றார்.

சூ. 24 : கலித்தளை மருங்கின் கடியவும் பெறாஅ

கருத்து : கலிப்பா அடிக்கண் வெண்சீரும் ஆசிரிய உரிச்சீரும் வருப நிலைமை கூறுகின்றது.

உரை : கலித்தளையான்வரும் கலிப்பா அடிகளின்பால், மேற்கூறிய வெண்சீரும் ஆசிரியவுரிச்சீரும் ஒருங்கு வருதலை நீக்கவும் பெறா.

எ – டு. "ஓங்குதிரை யடுக்கம் பாய்ந்துயிர் செகுக்குந் துறைவகேள்"
"விலங்குமணிப் பகும்பொன்னின் வியலறைமேல் விளையாடி" எனவரும்.

சூ. 25 : கலித்தளை அடிவயின் நேரீற் றியற்சீர்
நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே

கருத்து : கலியடிக்கள் நேரீற்றியற்சீர்கள் வாரா என்கின்றது.

உரை : கலியோசை பெறற்குரிய கலித்தளை யான்வரும் கலியடியின்கண் நேரீற்றியற்சீர் நிலைபெறுதற்குரித்தாகா தென்பது ஆராய்வார்க்குப் புலனாகும்.

கலிவெண்பாவினுள்ளும் கொச்சகத்துள்ளும் இயற்சீர் பயின்றுவருதலின் கலித்தளை அடிவயின் வாரா என்பது ஆராய்வார்க்குப் புலனாகும் என்றார்.

நேரீற்று இயற்சீர் இரண்டாயினும் தொகுதி ஒருமை பற்றி உரித்தன்று என ஒருமையாற் கூறினார் என்க.

சூ. 26 : வஞ்சிமருங்கினும் இறுதி நில்லாது.

கருத்து : வஞ்சியடிக்கண் இயற்சீர் வாராத இடங் கூறுகின்றது.

உரை : கலித்தளையடியேயன்றி வஞ்சிப்பாவின் அடிக் கண்ணும் ; இயற்சீர்கள் வந்து தூங்கலோசைபட இறுதிக்கண் நில்லாது.

(எ-டு) மண்டிணிந்த நிலனும்
நிலவேந்திய விசும்பும் (புறம் - 2)

என்னும் வஞ்சியடிகளின் இறுதிநிற்கும் இயற்சீர்கள் தூங்கா வாயின.

இவற்றை மண்ண்டி ணிந்தநிலனும், நிலனே ஏந் தியவிசும்பும் என அசையும் சீரும் இசையொடு சேர்த்தித் தூங்கலோசைபெற இசைத்துக் கொள்ளல் வேண்டுமென்க.

சூ. 27 இசைநிலை நிறைய நிற்குவ வாயின்
அசைநிலை வரையார் சீர்நிலை பெறலே

கருத்து : தனியசைகள் ஓரேர்வழிச் சீர்நிலை பெறும் என்கின்றது.

உரை : நால்வகை ஓசையான் நிகழும் பாக்களிடத்து அவ்வவ் ஓசைவழாமல் முன்னும் பின்னும் நிற்கும் சீர்களான் நிறைவுற நிற்பனவாயின் நால்வகை அசைகளும் சீராக நிலை பெறுதலை நீக்கார் ஆசிரியர்.

இயலசை இரண்டும் வெண்பாவின் ஈற்றடி இறுதிச் சீராக வரும், சிறுபான்மை கலிப்பா அம்போதரங்க உறுப்பினுள் சீராக வரும். பெரும்பான்மையும் முதலிறுதிக்கண் கூனாக அன்றி வாரா. உரியசைகள் அடி மூவிடத்தும் ஏற்ற பெற்றிவரும்.

(எ-டு) கழல்தொழா மன்னவர்தங் கை.
நற்றாள் தொழாஅர் எனின்
பகவன் முதற்றே யுலகு
தானமிழ்தம் என்றுணரற் பாற்று. என வெண்பா
ஈற்றின்கண் வந்தன.
முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇ
கறவை தந்து பகைவர் ஓட்டிய (புறம் 263)
வென்றி தந்து கொன்றுகோள் விடுத்து (புறம் 260)

என உரியசைகள் மூவிடத்தும் வந்தன.

சூ. 28 : இயற்சீர்ப் பாற்படுத் தியற்றினர் கொளலே
தளை வகை சிதையாத் தன்மை யான

கருத்து : அசைச்சீர்கள் தளைநிலை எய்தி ஓசைபயக்குமாறு கூறுகின்றது.

உரை : மேற்கூறியாங்குத் தனியசைகள் சீர்நிலை பெறுங்கால் ஆசிரியத் தளையும் வெண்டளையும் கொள்ளற்

குச் சிதையாத இலக்கணத்தானே அவற்றை இயற்சீரின் பாற்படுத்து அவை தளை கொள்ளுமாறே தளை கொண்டு ஓசைகளை இயற்றிக் கொள்க.

இயலசைகள் இடையே நின்று தளைகொள்ள இயலா வாகலின் ஏற்புழிக் கோடலான் தளை கோடற்கு உரியசைகளே சிறப்புடையன எனக் கொள்க. இயலசைகள் இறுதிநின்று மேல்நின்ற சீரொடு தளை கொள்ளும்.

(எ - டு) வாலெயி றூறிய நீர்
தாளை வணங்காத் தலை. வெண்டளையாயின
கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்.
(புறம் 18) = ஆசிரியத்தளை
செருப்பறை கேட்டே விருப்புற்று மயங்கி
= வெண்டளை
யானை எறிந்து களத் தொழிந் தனனே
(புறம்—279) வெண்டளை
துணையள வறிந்து நல்கினர் விடினே
(,, 208) முன்னர் ஆசிரியத்தளையும் பின்னர் வெண்டளையுமாயின.

இனி நேர்பசை குற்றுகரஈறாயின் ஓரெழுத்தாம். முற்றுகர கரமாயின் இரண்டெழுத்து. வண்டு- மின்னு என வரும். நிரைபசை முற்றுகரஈறாயின் இரண்டெழுத்து - முற்றுகர ஈறாயின் மூன்றெழுத்து-கடறு, அரவு எனவரும். நுந்தை முற்றுகரமாகவும் குற்றுகரமாகவும் வரும் ஆதலின் இடம் நோக்கி எண்ணிக்கொள்க.

சூ. 29 வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே

கருத்து : அசைச்சீர்கள் இயற்சீர் போலத் தளை கொள்ளும் என நின்ற அதிகாரத்தான் வெண்சீர்தளை கொள்ளுமாறு கூறுகின்றது.

உரை : வெண்பா உரிச்சீரின் ஈற்றசையாகிய நேரசை தளைகோடற்கண் நிரையசை இறுதியாகிய பாதிரி—கணவிரி போல நிரையசை இயல்பிற்றாகும்.

என்றது, அசை வகையான் நேரசையாயினும் தளை நிலைக்கண் நிரையசையியல்பிற்றாய் பிறிதாக எதிர்வருஞ்சீர் முதலசை நேராயின் வெண்டளை எனவும் வருஞ்சீர் வெண்பா

உரிச்சீராகவே வரின் முதலசை நேரசையாயின் வெண்சீர் வெண்டளை எனவும் நிரையசையாயின் கலித்தளை எனவும் கொள்ளப்படும். என்னை

"சீரியை மருங்கின் ஓரசை ஒப்பின்
ஆசிரியத்தளை என்ற றைதல் வேண்டும்"
(சூ - 55) எனவும்
"அளவும் சிந்தும் வெள்ளைக்குரிய"
தளைவகை ஒன்றாத் தன்மையான
(சூ - 57, 58) எனவும்
நிரைமுதல் வெண்சீர் வந்து நிரைதட்பினும்
வரைநிலை யின்றே அவ்வடிக் கென்ப
(சூ - 60) எனவும்

ஆசிரியர் தளைநிலை பற்றி மேற்கூறுதலான் என்க.

(எ-டு) பொறிவாயி + லைந்தவித்தான் + பொய் தீ ரொழுக்க
நெறிநின்றார் + நீடுவாழ் வார் எனவரும்.

சூ. 30 : இன்சீர் இயைய வருகுவ தாயின்
வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே

கருத்து : ஆசிரிய அடிக்கண் வெண்சீர் விரவுமாறு கூறுகின்றது.

உரை : இயற்சீரொடு ஓசை இயையவருமாயின் ஆசிரிய அடிக்கண் வெண்சீர் வருதலை நீக்கார் ஆசிரியர்.

(எ-டு) தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து
(புறம் 19)
நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
(புறம் 163)

இவற்றுள் வெண்சீர்கள் நிரையசையியல்பிற்றாய் நின்று ஓசை இயைந்து நிற்குமாறு காண்க.

சூ. 31 : அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்
ஒன்றுதலுடைய ஓரொரு வழியே

கருத்து : ஆசிரிய அடியுள் வஞ்சியுரிச்சீர் அருகிவருமாறு கூறுகின்றது.

உரை : இன்சீர் இயைய வருவதாயின் ஆசிரிய அடியின் கண் ஒரோவழி வஞ்சியுரிச்சீர் இணைந்து வருதலுடையவாகும்.

(எ-டு) "மாரியொடு மலர்ந்த மாத்தாட் கொன்றை"
"அலரி நாறு துவர்வாய் அமர்த்த நோக்கின்"
மாரியொடு — மாசேர்சுரம்
அலரிநாறு புலிசேர்சுரம். என வரும். இவற்றை இடைக்காலத்தார் கூவிளங்காய் கருவிளங்காய் என்பர்.

காடுதேரா உழிதரும் கடுங்கண் யானை
— பாம்பு சேர்வாய்
சந்துசிதைய உழுத செங்குரற் சிறுதினை
— பாம்பு வருவாய்
கடறுகவரா விழிந்து கான்யாறுவழிந்த
— களிறு வருவாய்

முன்னர் (சூ-23) வெண்பா உரிச்சீரும் ஆசிரிய உரிச்சீரும் ஒருங்கு வாரா என்றார். ஈண்டு இயற்சீரொடு வஞ்சியுரிச்சீர் ஒரோவழி ஒன்றி வருமென்பது கூறப்பட்டது.

சூ. 32 : நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே.

கருத்து : நிறுத்த முறையானே இதுகாறும் சீர்பற்றிய இலக்கணங்களைக் கூறி அடிஇலக்கணங்கூறத் தொடங்குகின்றார். இச்சூத்திரம் அடி என்பது இதுவெனக் கூறுகின்றது.

உரை : நான்கு சீர்களைக் கொண்டதொரு தொடரே அடி எனக் கூறப்படும்.

எனவே நாற்சீரின் மிக்குங் குறைந்தும் வரின் அவை அச்சீர்களின் எண்ணலளவைபான் இருசீரடி, முச்சீரடி, ஐஞ்சீரடி, அறுசீரடி, எழுசீரடி என விதந்து கூறப்படும் என்பது கருத்து.

இந்நியதி பிறழாமல் இவ் ஆசிரியர் கூறுவதைக் காணலாம் : அதனான் அடி என்று வாளா கூறின் நாற்சீரடியையே குறிக்குமென உணர்க. அதனான் நாற்சீரடிக்கு நேரடி அளவடி என்ற பெயர்களும் உண்டு. இதனைப் பட்டாங்கமைந்த அடி (சொல் - 407) என மேற்கூறினார்.

இனி இந்நாற் சீரடிகளுள் உயிர்ப்படையவாகி நிற்கும் எழுத்துக்களின் அளவையால் நெடுமை குறுமை கோடல் நூலோர் மரபு. அம்மரபு பற்றிப் பின்னர் நாற்சீரடிகளையே குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடி என ஐவகையாகப் பிரித்தோதுவார்.

குறியன் நெடியன் என்புழி உறுப்புக்களின் குறைவு, மிகுதியைக் கருதாது அளவை கருதியே கொள்ளப்படுதல் போல அடியினது (ஓசையை) எழுத்தளவுகளைக் கருதியே குறளடி முதலாய பகுப்புக்கள் செய்யப்பெற்றன என அறிக.

இந்நுண்மையை இகந்து இடைக்கால யாப்பிலக்கண நூலார் சீர்களை அளவையாகக் கொண்டு இருசீர் கொண்டது குறளடி முச்சீர் கொண்டது சிந்தடி நாற்சீர் கொண்டது அளவடி ஐஞ்சீர் கொண்டது நெடிலடி. அறுசீரும் அதற்கு மேலும் கொண்டது. கழிநெடிலடி எனக் கொண்டனர். கழிநெடிலடி வரையறையின்மையால் சீர்களை எண்ணிக் கொள்ளுமாறு அவர்கட்கு நேர்ந்துள்ளது.

தொல்காப்பியநெறி பிறழ உரையாசிரியன்மார் இவ்வடியிலக்கணம் பற்றிக் குழம்பிக் கூறியுள்ளார். ஆசிரியர் யாண்டும் சீர்களை அளவையாகக் கொண்டு அடிகளின் பெயர் கூறவில்லை என்பதை மறவாது இச்செய்யுளியலின் பொருளைக் காணுதல் மாணாக்கர் கடனாகும்.

சூ. 33 : அடியுள் ளனவே தளையொடு தொடையே

கருத்து : தளையும் தொடையும் காண வேண்டிய இடங் கூறுகின்றது.

உரை : தளையும் தொடையும் பற்றிக் கூறப்பெறும் இலக்கணம் அளவடியாகிய நாற்சீரடிக்கண் அமைந்தனவேயாம்

எனவே இருசீர் முச்சீர் ஐஞ்சீர் அறுசீர் எழுசீரடிகளுள் வரும் தளையும் தொடையும் வரையறுத்து ஆராயப்படா என்றவாறு.

சூ. 34 : அடி இகந்து வருதல் இல்லென மொழிப.

கருத்து : அடியின் இலக்கணத்தை வற்புறுத்தி ஆண்டு நிகழ்வதோர் ஐயமகற்றுகின்றது.

உரை : நாற்சீர் கொண்டது அடி என ஓதப்பெற்ற இலக்கணத்தினைக் கடந்து அடியானது வருவதில்லை.

அஃதாவது வஞ்சியபடியே இருசீர்த்தாகும் (சூ-43) முச்சீராலும் வருமிடனுடைத்தே (சூ-45) என வஞ்சிப்பா இருசீரடியானும் முச்சீரடியானும் வருமென இலக்கணம் கூறி அவற்றை அடி என ஆளுதலானும் முடுகியல் அறுசீரடி

எழுசீரடிகளான் நடைபெறும் எனக்கூறி அவற்றையும் அடி என ஆளுதலானும் பாக்களுக்கு ஏற்ப அடியின் அளவு மாறுபட்டு வருங்கொல்? என நின்ற ஐயம் நீங்க "அடியிகந்து வருதல்" இல்லை என்றார். எனவே அவை சீரொடு சார்த்தியே கூறப்படுமென்றவாறு.

இனி மேல்நின்ற சூத்திரப் பொருளை எதிர்மறை முகத்தான் வலியுறுத்திக் கூறுவதாகப் பொருள் கோடலுமாம். விதியாலும் மறையாலும் ஒன்றன் இலக்கணத்தைக் கூறுதல் ஆசிரியர் மரபென்று உணர்க.

இகத்தல் = குறைதலும் கூடுதலும்

"அடியிறந்து வருதல்" எனப்பாடங்கொள்வர் பேராசிரியரும் நச்சரும் அதுகொண்டு அவர்கூறும் பொருள் பெரிதும் செயற்கையாக உள்ளமையைக் காணலாம்.

சூ. 35 : அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே

கருத்து : பாட்டென்பதற்குக் காரணம் கூறுகின்றது.

உரை : எழுநிலத்தெழுந்த செய்யுட்களுள் நாற்சீர் அடிகளான் நடைபெறும் செய்யுளே பாட்டெனச் சிறப்பித்துக் கூறப்படும்.

எனவே அடிவரையின்றி நிகழ்வன செய்யுள் எனவும் பா எனவும் வழங்கப்பெறும் என்றவாறு,

இனிக் "குறுவெண்பாட்டின் அளவெழுசீரே" எனச் சீரை சுட்டிக் கூறியது சூத்திரநயம் நோக்கியென்றறிக. அன்றியும் குறள்வெண்பா ஈரடியான் வருமெனற் கேலாமையும் அறிக.

இனி நாற்சீரடிகளை எழுத்தளவுகளான் எய்திய ஓசையின் குறுமை நெடுமை பற்றி ஆளுகற்பொருட்டு அவ் எழுத்தளவை யான் வரையறை செய்து குறியீடு கூறத் தொடங்குகின்றார்.

சூ. 36 : நாலெழுத்து ஆதியாக ஆறெழுத்து
ஏறிய நிலத்தே குறளடி என்ப.

கருத்து : குறளடி யாமாறு கூறுகின்றது.

உரை : நாற்சீர் கொண்டதொரு அடிக்கண் நாலெழுத்துத் தொடக்கமாக ஆறெழுத்துவரை மிக்க மூன்று அடிகளையே குறளடி என்று கூறுவர் ஆசிரியர்,

சீர்கள் நிற்பதற்கு இடமாகலின் அடியை நிலம் என்றார். நிலத்தை என்பது நிலத்தே என நின்றது. ஐகார உருப்பின் வரலாறு சொல்லதிகார உரையுள் விளக்கப்பட்டது.

இவ்வாறே பொருள்கள் நிற்பதற்கிடமான செய்யுளையும் நிலமென ஆளுவர் தொன்னூலார்.

இங்ஙனம் எழுத்தளவைகளான் அடிகளுக்குப் பெயரிட்டாளுதல் தொல்லாசிரியர் முறைமை என்பது தோன்ற 'என்ப' என வழிநூல் வாய்பாடு தோன்றக் கூறினார்.

(எ – டு) கண்டு வந்து முந்து நின்று (4 எழுத்து)
வண்டு கண்டு சென்று நீக்கித் (5 ,,)
தொன்று பேசும் நன்கு கொண்டே (6 ,,)

என முறையே கண்டு கொள்க.

சூ. 37 : ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
ஈரெழுத் தேற்றம் அல்வழியான.

கருத்து : சிந்தடி யாமாறு கூறுகின்றது.

உரை : ஏழெழுத்தும், அதன்மேல் ஈரெழுத்தினும் ஏற்றமல்லாதவையான எட்டெழுத்தும் ஒன்பதெழுத்தும் சிந்தடிக்கு அளவெனக் கூறுவர் ஆசிரியர்.

(எ. டு) 'போது சாந்தம் பொற்ப ஏந்தி' (7 எழுத்து)
சோதி வானந் துன்னு வாரே'' (8 ,,)
கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
(9 எழுத்து) என

முறையே கண்டுகொள்க

சூ. 38 : பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒத்தநாலெழுத் தேற்றலங் கடையே

கருத்து : அளவடி யாமாறு கூறுகின்றது.

உரை : பத்தெழுத்தும் அதன்மேல் நாலெழுத்தினும் ஏற்றமல்லாத பதினொன்றும், பன்னிரண்டும் பதின்மூன்றும் பதினான்கும் ஆகிய எழுத்தும் நேரடிக்கு ஒத்த அளவெனக் கூறுவர் புலவர்.

(எ-டு) ''வளம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்''
(10 எழுத்து)
''ஆர்கலி நறவின் அதியர் கோமான் (11 ,,)

"பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி"
(12 ,,)

"பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ"
(13 ,,)

"களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை"
(14 ,,)

என முறையே கண்டு கொள்க.

சூ. 39 : மூவைந் தொழுத்தே நெடிலடிக்களவே
ஈரெழுத்துமிகுதலும் இயல்பென மொழிப

கருத்து : நெடிலடியாமாறு கூறுகின்றது.

உரை : பதினைந்து எழுத்து நெடிலடிக்கு அளவெனக் கூறுவர் புலவர். அதன்மேல் பதினாறும், பதினேழுமாக இரண்டு எழுத்துக்கள் மிக்குவருதலும் நெடிலடியின் இயல் பென அவர் கூறுவர். எழுத்தே என்னும் ஏகாரம் அசை.

எ,டு : பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
(15 எழுத்து)

நகைதாழ்பு துயல்வருஉம் வகையமை பொலங்குழை
(16 ,,)

அறிவுமடம்படுதலும் அறிவுநன் குடைமையும்
(216) (17 ,,)

என முறையே கண்டு கொள்க.

சூ. 40 : மூவாறெழுத்தே கழிநெடிற் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப.

கருத்து : கழிநெடி லடி யாமாறு கூறுகின்றது.

உரை : பதினெட்டெழுத்துக்கள் கழிநெடிலடிக்கு அள வாகும். அதன்மேல் பத்தொன்பதும் இருபதுமாக இரண் டெழுத்து மிக்கு வருவதும் அவ்வடியின் இயல்பெனக் கூறுவர்

எ.டு : கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரியகலிமாவும்
(புறம் 55) (18 எழுத்து)

நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய
புகன்மறவரும் (" 19 ")

அமர்காணின் அமர்கடந்தவர் படைவிலங்கி
எதிர் நிற்றலின் (" 20 ")

என முறையே கண்டு கொள்க.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மலை முதல் மனை வரையிலும் கண்ட பல கடவுளர்

மு. சண்முகம் பிள்ளை
சிறப்பு நிலைப் பேராசிரியர்
சுவடிப்புலம் ஓலைச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

அழகிழந்து பாழ்பட்ட மன்றங்களிலும் பிற பாழிடங்களிலும்ப் பேய்கள் திரிந்து கொண்டிருக்கும் (பதிற் : 13:14:19, மதுரை. 156-163) ஆகவே, சுடுகாடும் பாழ் பட்ட இடங்களும் பேயின் வாழ்விடங்களாகின்றன என்பது தெரியவரும்.

அணங்கு, சூர் என்பன போலவே பேயும் மனிதரைப் பற்றிப் பிடிக்கும் இயல்புடையன ஆம். இதற்குச் சாந்தி செய்யும் பொருட்டு வழிப்போவார் செல்லும் வழியில் உள்ள கவர்த்த சந்திப்பு இடங்களில், அதாவது நால்திசையும் செல்லும் வழிகள் பிரியும் இடத்தில் வழிபாடு இயற்றுவர். அப்பொழுது பலியாக ஆட்டின் கழுத்தை அறுத்துத் தினையையுடைய பலியை இட்டு, பல்வகை வாத்தியங்களை முழக்குவர். வடக்கிலிருந்து உயிர்விடத் துணிவாரும் கவர்ந்த வழியிடையில் உள்ள மர நிழலில் வடக்கிருத்தல் வழக்கம்.

"உள் ஆற்றுக் கவலைப் புள்ளி நீழல்,
முழுஉ வள்ளூரம் உணக்கும் மள்ள" (புறம். 219 1-2)

என்பது கவர்வழியில் வடக்கிருத்தல் பற்றித் தெரிவிக்கிறது. கவர்த்த வழிகளில் பேய் பிடித்தாருக்காகச் சாந்தி வழிபாடு இயற்றுதலைப் பின்வரும் குறுந்தொகைப் பாடல் அறிவிக் கின்றது. அது வருமாறு :

மறிக்குரல் அறுத்து, தினைப்பிறப்பு இரீஇ,
செல் ஆற்றுக் கவலைப் பல்இயம் கறங்க,
தோற்றம் அல்லது நோய்க்கு மருந்து ஆகா
வேற்றுப் பெருந்தெய்வம் பல உடன் வாழ்த்தி.
(குறுந் : 263:1-4)

வளப்பும் மிக்க ஊர்களிலே தமக்கு இடப்படும் பலியை உண்ணும்பொருட்டுத் தான் வாழும் பாழிடத்தை மோதிப் புடைத்துக் கொண்டு பேய்கள் எழுந்து வருமாம்.

"வேனில் முருக்கின் விளைதுணர் அன்ன
மாணா விரல வல்வாய் பேஎய்
மல்லல் மூதூர் மலர்பலி உணீஇய,
மன்றம்போழும் புன்கண் மாலை" (நற் : 73:1-4)

என்னும் நற்றிணைப் பகுதியால் மாலைப் பொழுதில் மன்றங்களிலே பேய் பலி கொள்ளுதல் விளங்கும். நன்னன் என்பானது பாழியில் உறையும் அச்சம தரும் பேய்களுக்குப் பலியாக மிஞிலி என்பான் ஊட்டினை ஏற்பித்த செய்தி,

"கறை அடி யானை நன்னன் பாழி,
ஊட்டு அரு மரபின் அஞ்சு வரு பேஎய்க்
கூட்டு எதிர்கொண்ட வாய்மொழி மிஞிலி"
(அக. 142:9-11)

எனவரும் அகப்பாட்டுப் பகுதியால் உணரலாம். குற்றமற்ற பெருங்கற்புடையாள் ஒருத்தி பேய்க்குப் பலியாகத் தன் குழந்தையைக் கொடுத்துவிடுகிறாள். அவள் கொடுத்தகுழந்தை யாகிய பலியைப் பேய் பற்றியதும் தாய் அதனைக் கைவிட்டு விடுகின்றாள். மேலும் பேய் தனக்குக் கொடுக்கும் பலிகளை முறைப்பட ஏற்றுக்கொண்டு அப்பால் நீங்கிச் சென்று விடுகிறது.

"மாசுஇல் கற்பின் மடவோள் குழவி
பேஎய் வாங்கக் கைவிட்டாங்கு,
சேணும் எம்மொடு வந்த
நாணும் விட்டேம் ; அலர்க, இவ் ஊரே ! (நற் : 15:7-10)

"விருந்தின் வாழ்க்கையொடு பெருந்திரு அற்றென,
அருஞ்சமத்து அருநிலை தாங்கிய புகர்நுதற்
பெருங் களிற்று யானையொடு அருங்கலம் தராஅர்,
மெய்பனி கூரா, அணங்கு என பராவலின்,
பலிகொண்டு பெயரும் பாசம் போல,
நிறைகொண்டு பெயர்தி : வாழ்க நின் ஊழி !"
(பதிற். 71 : 19 – 24

மன்னனுக்குப் பணிந்து திறை செலுத்திய பகை மன்னர் தரும் பொருளை ஏற்று அவர் உயிரைக் கொல்லாது விட்டு நீங்குதல் போல, பிசாசமும் தன்னால் பற்றப்பட்டாரது உயிரைக் கொள்ளாது தனக்கு இட்ட பலியை மட்டும் கொண்டு நீங்குகின்றது.

பெரும்போர் நடக்கும் போர்க்களத்துள் பேய்கள் புகுந்து, அங்கே இறந்து விழும் வீரர்கள், யானை, குதிரை முதலிய விலங்குகள் ஆகியவற்றின் ஊனையும் கொழுப்பு முதலியவற்றையும் தின்று குடர்மாலைகளை அணிந்துகொண்டு அங்கே மகிழ்ச்சிக் கூத்தாடுதல் பற்றிக் கவிஞர்கள் பலரும் வருணித்துள்ளனர். பேய்மகள் பிணங்களின் ஊன்களைத் தோண்டி உண்ணும் விருப்பமுடையனவாயிருத்தலை,

அணங்கு அரு மாபின் பேஎய் போல
விளர் ஊன் தின்ற வேட்கை நீங்க (அக. 265 : 14 - 15)
பேஎய் மகளிர் பிணம் தழூஉப் பற்றி,
விளர் ஊன் தின்ற வெம்புலால் மெய்யர் (புற. 359 : 4 – 5)

என வரும் பாடற் பகுதிகளால் அறியலாம். இப் பேய்கள் நிணத்தைத் தின்று மகிழ்ந்து சிரித்துக் கும்மாளமிடுகின்றன. "கவை அடிப் பேய்மகள் நிணன் உண்டு சிரித்த தோற்றம் போல" என்பதால் ஊனுண்ட பேய்களின் எக்களிப்புவெளியாம். களிப்பு மிகுதியால் பேய்கள் ஒருபுறம் ஆடும் ஆட்டமும், களத்து வெட்டுண்டுவீழ்ந்தாருடையகவந்தவங்களின் துள்ளலும் போர்க்களத்தே மிகுகின்றன. பேய்மகளிரும் பிற பேய்களும் துணங்கைக் கூத்தாடுகின்றனர்.

"பொழுது ஆண்டு ஒழிந்த மைந்தர் புண் தொட்டு,
குருதிச் செங்கைக் கூந்தல் தீட்டி,
நிறம் கிளர் உருவின் பேஎய்ப் பெண்டிர்
எடுத்து எறி அனந்தற் பறைச்சீர் தூங்க
பருந்து அருந்துற்ற தானை" (புற. 52 : 2 - 4)
"கணம் கொள் கூளியொடு கதுப்பு இகுத்து அடைச்சி,
பிணம் தின் யாக்கைப் பேய்மகள் துவன்றவும்"
(பட்டின. 259 : 260)
இனக்கடி விராய வரிக்குடர் வெருவார் அடைச்சி,
அழகுரற் பேய்மகள் அயர' (புற. 370 : 23 – 25)
"தலைதுமிந்து எஞ்சிய மெய் ஆடு பறந்தலை,
அந்தி மாலை விசும்பு கண்டன்ன
செஞ்சுடர் கொண்ட குருதி மன்றத்து,
பேஎய் ஆடும் வெல் போர்
வீயா யாணர் நின்வயினானே" (பதிற். 35 : 6 - 10)
'நிலம் இழி நிவப்பின் நீள்நிரை பல சுமந்து
உருகெழு கூளியர் உண்டு மகிழ்ந்து ஆட,
குருதிச் செம்புனல் ஒழுக

செருப் பல செய்குவை ; வாழ்க நின் வளனே :
(பதிற். 36 : 11-14)

பிணக் கோட்ட களிற்றுக் குழும்பின்
நிணம் வாய்ப் பெய்தபேய் மகளிர்
இணை ஒலி இமிழ் துணங்கைச் சீர்ப்
பிணை யூபம் எழுந்து ஆட, (மதுரை. 24-27)

'களிற்றுக் கோட்டன்ன வாங்கு எயிறு அழுத்தி,
விழுக்கொடு விரைஇய வெண்நிணச் சுவையினள்,
குடர்த்தலை மாலை சூடி, 'உணத் தின
ஆனாப் பெருவளம் செய்தோன் வானத்து
வயங்கு பல் மினினும் வாழியர் பல, என
உரு கெழு பேய் மகள் அயர, (புற 371 : 21-26)

"உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதிஆடிய கூர் உகிர்க் கொடுவிரல்
கண் தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண் தொடித் தடக்கையின் ஏந்தி, வெருவர
வென்று அடு விறற் களம் பாடி, தோள் பெயரா,
நிணம் தின் வாயள் துணங்கை தூங்க'
(முருகு. 51-56)

மேற்குறித்த பாடற்பகுதிகள் போர்க்களம், போர்க்களத்தில் பேய்களின் செயல்கள், அவை ஊன் உண்டு செருக்குதல், துணங்கைக் கூத்தாடுதல் என்னும் செய்திகள் பலபடப் புணைந்து கூறப்பட்டிருத்தல் படித்து இன்புறுதற்குரியன.

மன்னர்கள் ஒருவரோடு ஒருவர் பொருது, பேய்களுக்கு வயிறார ஊனுணவு அருத்துதலைக் 'களவேள்வி' எனப் புகழ்வர். களத்தில் பேய்கள் கூழ் சமைத்து எல்லாப் பேய் களும் கூடியிருந்து உண்டு மகிழ் சிறப்பினை இக் களவேள்வி தெரிவிக்கும். யானைகள், மரக்கலம் கடலில் நீரைக் கிழித்து ஓடுமாறு, முன் சென்று போர்களத்துப் பரப்பை மேலும் விரிவு படுத்துகின்றன. அங்கே இலை வடிவு பெற்ற வேலை ஏந்திச் சென்று போரைக் கலக்கிப் பகைவரைப் புறங்காண்கின்றனர். அங்கே சிதைந்து கிடக்கும் முரசத்தைப் பேய்கள் கூழ் சமைக்கும் கலமாகக் கொள்கின்றன. இறந்தவர்களின் முடித்தலைய அடுப்பாக அமைத்து, அதன்மேலே முரசாகிய கலத்தை வைத்து, குருதிப் புனலாகிய உலையின்கண் தசையும் மூளையும் முதலானவற்றைப் பெய்கின்றன. அவ்விறந்து பட்ட வீரர்களின் வீரவளையை உடைய தோளாகிய

துடுப்பினால் துழாவிக் கூழ் சமைக்கின்றன பேய்கள். சோறாக்குவோனாகிய பேய்மடையன் முறைமை அறிந்து அதனை இயற்றுகின்றான்.

பிணக்கோட்ட களிற்றுக் குழும்பின்
நிணம் வாய்ப் பெய்த பேய் மகளிர்
இணை ஒலி இமிழ் துணங்கைச் சீர்ப்
பிணை யூபம் எழுந்து ஆட,
அஞ்சு வந்த போர்க்களத்தான்,
ஆண்தலை அணங்கு அடுப்பின்,
வயவேந்தர் ஒண் குருதி
சினத்தீயின் பெயர்பு பொங்க,
தெறல் அருங் கடுந் துப்பின்,
விறல் விளங்கிய விழுச் சூர்ப்பின்,
தொடித் தோட்கை துடுப்பு ஆக
ஆடுற்ற ஊன் சோறு,
நெறி அறிந்த கடி வாலுவன்
அடி ஒதுங்கிப் பின் பெயராப்
படையோர்க்கு முருகு அயர,
அமர் கடக்கும் வியன் தானை (மதுரை. 24-39)
களன் அகற்றிய வியல் ஆங்கண்
ஒளிறு இலைய எஃகு ஏந்தி,
அரைசு பட அமர் உழக்கி,
உரை செல முரசு வெளவி,
முடித்தலை அடுப்பு ஆக,
புனற்குருதி உலைக் கொளீஇ,
தொடித்தோட் துடுப்பின் துழந்த வல்சியின்,
அடுகளம் வேட்ட அடுபோர்ச் செழிய (புறம். 26:4-11)

மேலே குறித்தவை போர்க்களத்தில் பேய் முதலிய வற்றிற்கு வெற்றி மன்னர் வைக்கும் விருந்தாகும். இந்தப் பேய் விருந்தையே 'கள வேள்வி' என்று பாராட்டுவர். இக் களவேள்விச் சித்திரங்கள் பிற்காலத்தில் தோன்றிய பரணிப் பிரபந்தங்களுக்கு மூலக் கருவாக அமைந்து விளங்குதல் காணலாம்.

போர்க்களத்தில் பேய்களோடே கூடத்திரியும் மற்றொன்று பூதம். பூதம் போர்க்களத்தில் காவல்புரிந்து நிற்பது.

பேய்மகள் பற்றிய பிணம் பிறங்கு பல் போர்பு,
கண நரியோடு கழுது களம் படுப்ப,

பூதம் காப்ப, பொலிகளம் தழீஇ,
பாடுநர்க்கு இருந்த பீடுடையாள: (புற. 369: 15-18)

என வரும் புறநானூற்றுப்பகுதியில், 'பூதம் காப்ப, பொலிகளம் தழீஇ' என வருவது கவனிக்கத் தக்கது. பூதங்களும் பேய்களைப்போன்றே தம் சுற்றத்துடன் பிணைந்து போர்க்களத்தில் துணங்கைக் கூத்து ஆடுமாம். இவையும் குறள்வடிவின ஆயினும் பேயினும் பெரிய உடம்பு படைத்தவை. களத்தில் அடுக்கப்பெற்ற நெற்கதிரின் கூடுகளும், அச் சூட்டின் மேல் சிலந்தி வெண்ணூல் பரப்பி இழைத்திருக்கும் கூடுகளும் துணங்கைக் கூத்தாடும் பூதங்கள் வெண்மையான ஆடையை உடுத்திநிற்கும் தோற்றம் போன்று உள்ளது என்று வருணிக்கின்றார் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

'கணம் கொள் சுற்றமொடு கைபுணர்ந்து ஆடும்
துணங்கை அம் பூதம் துகில் உடுத்தவை போல்,
சிலம்பி வாய்நூல் வலந்த மருங்கின்,
குழுமு நிலைப் போரின் முழுமுதல் தொலைச்சி'
(பெரும். 234-237)

என்பது பெரும்பாணாற்றுப் படைதரும் பூதங்களின் காட்சி.

கொடையாளியாக விளங்கிய கழுவுள் என்பானது காமூரில் பூதத்தால் தரப்பட்ட பொரிந்த அடிமரத்தோடு கூடிய வேங்கைமரத்தின் புதுமலர்போல மணம் வீசும் கூந்தலினையுடையாள் தலைவி என்று பேசுகிறான் ஒரு தலைவன்.

'மா வண் கழுவுள் காமூர் ஆங்கண்,
பூதம் தந்த பொரி அரை வேங்கைத்
தண் கமழ் புதுமலர் நாறும்
அம் சில் ஓதி ஆய்மடத் தகையே' (அக. 365 : 12-15)

இங்கே பூதம் தந்த வேங்கை என்பது பூதம் குடி கொண்டுள்ள வேங்கை மரமாதல் வேண்டும்.

இப் பூதங்கள் காளிகோயிலின் வாயிலில் நின்று காவல் புரிதலும் தெரியவருகிறது. காளியின் படைகளில் பேய்ப் படையைப் போல இப் பூதப்படைகளும் அவளுக்குத் தொண்டு புரிந்து வருவன.

'பூதம் காக்கும் புகல் அருங் கடிநகர், (பட். 57)

என்று காளிகோட்டம் குறிக்கப்படுதல் காணலாம். இதற்குப் 'பூதங்கள் வாசலிலே காத்திருக்கும் புகற்கு அரிய அச்சத்தை

யுடைய காளி கோட்டத்தில்' என நச்சினார்க்கினியர் தரும் உரையையும் கவனிக்கத்தகும்.

நடுகல்

போர்க்களத்தில் பேயும் பூதமும் குழுமி, கூழ் சமைத்து உண்டு, சுற்றத்துடன் கூடித் துணங்கை ஆடும் காட்சியைக் கண்ட நாம், வீரத்துடன் போரிட்டு மாய்ந்த வீர மறவரை மக்கள் போற்றிய வகையையும் காண்போம். பேரமரிலே அஞ்சாது பகைவர் எதிர் நின்று தம் வில்லாற்றல் காட்டி விழுப்புண்பட்டு மாய்ந்த வீரர்களின் பெயரையும் வீரச் செயலையும் பெருமையையும் கல்லில் எழுதிக்காட்டி, அதற்கு வழிபாடும் செய்து வந்துள்ளனர். நடுகல் நாட்டற்குரிய தகுதி படைத்த வீரர்களின் தகைமைச் சங்கப்பாடல்கள் நன்கு விவரித்துள்ளன. அவை வருமாறு:

'வீளை அம்பின் விழுத்தொடை மறவர்
நாள் ஆ உய்த்த நாம வெஞ்சுரத்து
நடை மெலிந்து ஒழிந்த சேண் படர் கன்றின்
கடை மணி உகுநீர் தொடைத்த ஆடவர்' (அக. 131 : 6-9)
'வீடுவாய்ச் செங்கணை கொடுவில் ஆடவர்' (அக. 19 : 7)
'ஏறுடை இனநிரை பெயரப் பெயராது,
செறி சுரை வெள்மேல் மழவர்த் தாங்கிய
தறுகணாளர் ......' (அக. 269 : 3-5)
'நல் அமர்க் கடந்த நாணுடை மறவர்' (அக. 67 : 7)
'வில் ஈண்டு அருஞ்சமம் ததைய நூறி,
நல் இசை நிறுத்த நாணுடை மறவர்' (அக. 387 : 13-14)
'வில் ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்' (அக. 35 : 6)
'விழுத்தொடை மறவர் வில் இட வீழ்ந்தோர்' (அக. 53 : 10)
'விழுத்தொடை மறவர் வில்இடத் தொலைந்தோர்'
(ஐங். 352 : 1)

'ஒன்னாத் தெவ்வர் உலைவு இடத்து ஆர்த்தென,
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்'
(மலைபடு. 386 - 387)

'பல் ஆத் திரள் நிரை பெயர்தரப் பெயர்ந்தது,
கல்லா இளையர் நீங்க நீங்கான்,
வில் உமிழ் கடுங்கணை மூழ்க,
கொல்புனல் சிறையின் விளங்கியோன்' (புற. 263:5-8)
'மனைக்கு விளக்கு ஆகிய வாணுதல் கணவன்
முனைக்கு வரம்பு ஆகிய வெல் வேல் நெடுந்தகை'
(புற. 314:1-2)

இங்ஙனமாக மறவர் முதலாகப் போரின் பல்வேறு நிலைகளிலும் அஞ்சாது பகைவர் எதிர்நின்று பொருது வீரப் பெருஞ் செயல் காட்டி மாய்ந்த வெற்றி மறவரின் பெயரையும் அவர் தம் தொண்டினையும் சிறப்புகளையும் கல்லில் பொறித்து நாட்டி, அக்கல்லிற்கு வருபாடும் செய்து வந்துள்ளனர்.

'பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுதல்
வேல் ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்'
(அக. 67:9-11, 131:10-12)

'விடுவாய்ச் செங்கணைக் கொடுவில் ஆடவர்
நல்நிலை பொறித்த கல்நிலை அகர' (அக. 179 : 7 - 8)

'எழுத்துடை நடுகல்' (ஐங். 352:2 ; அக. 53:11)

'கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென,
மருங்கில் நுணுகிய பேஎம் முதிர் நடுகல்
பெயர் பயம் படரத் தோன்று குயில் எழுத்து
இயைபுடன் நோக்கல் செல்லாது, அசைவுடன்
ஆறு செல் வம்பலர் விட்டனர் சுழியும்.' (அக. 297;6-10)

நடுகல் மயங்கு இருளில் ஓர் ஆள் போலவே காட்சி தருகிறதாம். ஆகவே, நடுகற்கள் பெரும்பாலும் ஓர் ஆள் உயரத்திற்கு நாட்டப்படும் எனக் கொள்ள இடமுண்டு. அதில் மறவனின் பெயரும் அவனுடைய பெருஞ்செயல்களும் குறிக்கப் பட்டிருக்கும். அவனுடைய உருவமுங்கூட அக் கல்லில் வடிக்கப் பெற்றிருக்கலாம் என்றும் ஊகிக்கும் வகையில் ஒருசில பகுதிகள் உள. காட்டுயானை ஒன்று மாலை இருளில் நடுகல் ஒன்றனை ஆள் எனக் கருதித் தன் காலால் உதைக்கின்றது. அப்பொழுது அதன் கால் நகங்கள் பெரிய பனை நுங்கின்தோடு போல ஒடிந்து விடுகின்றன. இவ்வகையான யானையின் செயலை,

'அகல் வாய் வானம் மால் இருள் பரப்ப,
பகல் ஆற்றுப் படுத்த பையென் தோற்றமொடு
சினவல் போகிய புன்கண் மாலை,
அத்த நடுகல் ஆள் என உதைத்த
கான யானைக் கதுவாய் வள் உகிர்,

இரும் பனை இதக்கையின், ஒடியும் அங்கண்' (அக.365:1-6)

என்வரும் அகநானூற்றுப் பாடற் பகுதியில் காண்கிறோம்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, எம்.ஏ.,எம்.ஓ. எல்.பிஎச். டி,
40, நைனியப்பன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

3. 2. 5. சீவனும் ஈசனும்

துவம்பதம் தத்பதம் இரண்டற்கும் முறையே சீவனும் ஈசனும் இயற்பெயர்ப் பொருளாவர்.

3. 2. 5. (அ) இருவர்க்கும் ஒற்றுமை இல்லை

இவர்களுள் ஈசனும் சீவனும் இயற்பெயர்ப்பொருளில் வேற்றுமை உடையவராயிருத்தலின், அவர்களுக்கு ஒற்றுமை ஏற்படுவதில்லை.

சீவனுக்கும் ஈசுவரனுக்கும், சீவன், ஈசுவரன் என்ற பெயராலும், பிண்டம் அண்டம் என்னும் இடத்தாலும், காரிய வடிவம் காரணவடிவம் என்னும் உபாதியாலும், வியஷ்டி (தனிமை), சமஷ்டி (தொகுதி) என்னும் உடற்பற்றினாலும், சிற்றறிவுடைமை, எல்லாவற்றையும் அறியும் முழு அறிவுடைமை என்னும் உணர்வினாலும் வேற்றுமை உண்டாயிற்று. அதனால் அவர்கள், பாதாள உலகமும், விண்ணுலகமும்போல நெடுந்தொலைவு வேறுபட்டிருப்பர். இங்ஙனம் வேறுபட்டிருத்தலால் இவர்களுக்கு எக்காலத்திலும் ஒற்றுமை ஏற்படுவதில்லை.

3. 2. 5. (ஆ) ஒற்றுமை ஏற்படும்

பெயர் முதலியவற்றால் சீவனுக்கும் ஈசுவரனுக்கும் ஒற்றுமை ஏற்படுவதில்லையென்றால், அப்பெயர் முதலியவற்றை விட்டு, அவ்விருவரிடத்தும் தொடர்ந்திருக்கும் சேதனத்தை (உயிரை) மட்டும் விடாது தொண்டால், அவர்கட்கு ஒற்றுமை ஏற்படும் என்பதாம்.

கூடஸ்தனுக்கும், பெரிய பொருளாகிய பிரஹ்மத்திற்கும் ஒற்றுமை ஏற்படுவது இலட்சணையென்னும் ஆகுபெயர்ப் பொருளாலாகும்.

3.2. 5. (இ) ஒற்றுமை காட்ட உதவும் இலட்சணை விளக்கம்

இலட்சனையென்னும் ஆகுபெயரிலக்கணத்தைப் பற்றி ஈண்டுச் சிறிது அறிந்து கொள்வது தக்கதாகும்.

அறமுதற்பொருளைக் காண்டற்குக் கருவியாகிய இலக்கண நூலையும் தருக்கநூலையும் நன்குணர்ந்துள்ள புலவர்கள், தாம் எடுத்துக் கூறும் இயற்பெயர்ப் பொருள்கள் பொருந்தாது முரண்படுமாயின், அவை முரண்படாமல் பொருள்படுமபடி ஆகுபெயர்ப்பொருள் கொள்ளுகின்றனர். அந்த ஆகுபெயர், விட்ட ஆகுபெயர், விடாத ஆகுபெயர், விட்டு விடாதஆகுபெயர்என்று மூன்று வகைப்படும்.

கங்கையில் இடைச்சேரி என்பது விட்ட ஆகுபெயருக்கும் கறுப்பு நிற்கச் சிவப்போடுகின்றது என்பது விடாத ஆகு பெய்ருக்கும அவனே இத்தேவதத்தன் என்பது விட்டுவிடாத ஆகுபெயருக்கும் எடுத்துக்காட்டுகளாம்.

கங்கையில் இடைச்சேரி என்புழிக் கங்கை என்னும் சொல் தனது இயற்பெயர்ப்பொருளாகிய வெள்ளத்தை விட்டு அதன் தொடர்பி (சம்பந்தி) யாகிய கரையை உணர்த்துவதால் அது விட்ட ஆகுபெயாப் பொருளாம்.

சிவப்போடுகின்றது என்புழிச் சிவப்பென்னும் சொல், தன் இயற்பெயர்ப்பொருளாகிய செந்நிறத்தை விடாது, அதன் தொடர்பி (சம்பந்தி) யாகிய குதிரை அல்லது மாடு முதலிய வற்றை உணர்த்துவதால் அது விடாத ஆகுபெயர்ப் பொருளாம்.

அவனே இத்தேவதத்தன் என்புழி, இறந்த காலமும் தொலைத்தேசமும், தேவதத்தனது உடம்பும், அவன் என்னும் சொல்லின் இயற்பெயர்ப் பொருளாம், நிகழ்காலமும், அண்மைததேசமும். தேவதத்தனது உடம்பும், இவன் என்னும் சொல்லின் இயற்பெயர்ப் பொருளாம். இங்கு இறந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும், தொலைத் தேசத்திற்கும் அண்மைத் தேசத்திற்கும் ஒருமையுணர்ச்சியில் முரண்பாடு இருத்தலின் அவற்றைவிட்டு, ஒருமை உணர்ச்சியில் முரண்பாடு இல்லாத தேவதத்தனது உடம்பை விடாது உணர்த்துவதால், அது விட்டுவிடாத ஆகுபெயர்ப் பொருளரம்.

3.2.5. (ஈ) ஜகதஜகலே (விட்டுவிடாத இலட்சணையே) பெருமொழிப்பொருள் அறிய உதவும்

பெருமொழியாம் தத்துவமசி மஹாவாக்கித்தின் பொருளை உணர்வதற்கு விட்டுவிடாத ஆகுபெரியலக்கணமே பொருந்துவதாகும்.

3.2.6. பெருமொழிப் பொருள் செய்தி !

தத்துவமசி என்னும் பெருமொழியானது தத் (அது), துவம் (நீ) என்னும் சொற்களின் வேற்றுமைத் தன்மைகளையுடைய இயற்பெயர்ப் பொருட்பகுதியான மாயை அவித்தை களை விட்டு, வேற்றுமைப் பண்புகளின்றிய பெரிய பொருளா யும், சான்றாயுமுள்ள உணர்வுப் பகுதியான (சேதனபாகமான) ஆகுபெயர்ப் பொருளை விடாமல், எப்பொழுதும் 'பெரிய பொருளே கூடஸ்தனாம்', (தத்துவமசி) 'கூடஸ்தனே பெரிய பொருளாம்' (துவம் தத் அசி) என்னும் அசி பதத்தின் பொருளும் ஒன்றே என்று ஒற்றுமையை அறிவிப்பதாகும்.

3.2.7. மித்தை நீக்கின் சத்தை அறியலாம்

எனவே, குடநீரிலும், முகில் நீரிலும் நிழலிடும் குடநீர் வெளி, முகில்நீர்வெளி என்னும் இரண்டும் உபாதியினால் கற்பனையாயிருத்தலின், அவை மித்தையேயாம். குடவெளி, பெருவெளி என்னும் இரண்டும் எப்போதும் ஒன்றேயாம். அதுபோல, அறிவு அல்லது அவித்தையில் நிழலிட்டுள்ள ஜீவனும், மாயையில் நிழலிட்டுள்ள ஈசனும் உபாதியினால் கற்பனையாயிருத்தலின், மித்தையேயாம். பிரஹ்மம், சாட்சி என்னும் இரண்டும் எப்போதும் ஒன்றேயாம். ஆதலின், இவ் வொன்றென்னுந் தன்னுணர்வு (அநுபவம்) ஐயம், திரிபு இன்றித் திடமாதற் பொருட்டுச் சிவோஹம் (சிவமே நான்-நானே சிவம்) என்று இடைவிடாமல் சமாதியிருந்து பயிற்சி செய்து, அப் பயிற்சி நன்கு பக்குவமான தன்னுணர்வில் தான் அறிவின்பம் என்னும் அனுபவத்தில் பிறழாதிருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் பிரம்மமே தானாகிப் பிறவி நீங்கிப் பேரின்பம் அடையலாம்.

6. மெய்யுணர்வு நிலைபேற்றிற்குத் தடை களும் அவற்றின் நீக்கமும்

சீவன்முத்தநிலை

பெருமொழி என்னும் மஹாவாக்கியத்தின் பொருளைத் தெளிய உணர்ந்து, அவ்வுணர்வு பெறுவதற்குத் துணையான, ஆசான் கூறிய உண்மை நெறி தவறாது, ஐந்து உறைகளுள் ஒவ்வொன்றையும், 'இது நான் அல்லன்; இது நான் அல்லன்' என்று கழித்து, அவற்றிற்கு வேறாய் நின்று, அதற்கு மேல்

காணப்படுகின்ற ஐந்துறைகளின் இன்மை வடிவமான பாழையும் (சூனியத்தையும்), 'நான் அல்லன்' என்று கழித்துப் பின்பு அகத்தில் அப்பாழைக் காணுநிற்கும் மெய்யுணர்வு வடிவமான 'சாட்சி நான்' என்று உள்ள நுட்பமான எண்ணத்தையும் அகற்றி, அப்பால் கடஸ்தன்-பிரஹ்மம் என்னும் (அகம் பிரஹ்மாஸ்மி-நான் பிரஹ்மமாய் இருக்கிறேன் என்னும்) எண்ணமும், நீக்கமற நிறைவாய் நிற்கும் எண்ணமும் (அகண்டாகார விருத்தியும்), இடையீடில்லாத தியானத்தின் தெளிவால் ஆன (நிதித்தியாசனத்தின்) முதர்ச்சி கைகூடலால், உறங்கினேன் கைப்பொருள்போல் நீங்கப்பெற்றால், யாண்டும் நீக்கமற நிறைந்தின்ப வடிவாயிருக்கும் பெரிய பொருளை (பிரஹ்மத்தை)க் காணலாம் (பெரிய பொருள் வடிவமாக விளங்கலாம்). அவ்வாறு நெடும்போது திளைத்திருக்கலாம். அவ்வாறு திளைத்திருத்தலே பிறப்பற்றுப் பேரின்பம் அடைதலான சீவன் முத்த நிலையாம் (உடலோடு கடியிருக்கும் போதே விடுதலை பெறும் நிலையாம்).

முத்தடைகள்

ஆனால், உயிர் இறை ஒன்றுபட்ட கண்கூடான அறிவையும் (ஜீவப்பிர உற்ம ஐக்கிய அபரோட்ச ஞானத்தையும்) கெடுக்க வல்லவனமாகிய தடைகள் மூன்று உள்ளன. அந்தத் தடைகள் மூன்றும் அடையாதபடி விழிப்புடன் இருத்தல் வேண்டும். அத்தடைகள் ஏற்பட்டால் உயிர் இறை ஒற்றுமை உணர்வு, வீட்டைதற்கு அடிப்படையாகாமல் கெட்டுப்போம். ஆதலால், அத்தடைகளை இன்றியமையாது கெடுத்தல் வேண்டும். துன்பத்தைச் செய்வதையே இயல்பாக உடைய இம்முத்தடைகளும், கடந்த பிறவிகளில் பழகி வந்து பழக்கத்தால் அடிக்கடி உண்டாவனவாம். ஆதலால், அவற்றைக் கெடுத்தற்கு மிக்க விழிப்புடைமை வேண்டப்படும்.

அத்தடைகள் யாவை? அவையே, அறியாமை (அஞ்ஞானம்), ஐயம் (சந்தேகம்), திரிபு (விபரீதம்) என்பனவாம்

இவற்றை எவ்வாற்றால் கெடுத்தல் வேண்டும்?

அறியாமையைக் கேள்வியாலும் (சிரவணத்தாலும்), ஐயத்தைச் சிந்தித்தலாலும் (மனத்தாலும்), திரிபைத் தெளிதலாலும் (நிதிந்தியாசனத்தினாலும்) முயன்று கெடுத்தல் வேண்டும்.

இதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்கலாம்.

ஐவகைத்தளைகள்

எங்ஙனம் நெருப்பின் கடும் ஆற்றல், மணிமந்திர மருந்துகளால் கட்டுப்பட்டவிடத்து, அந்நெருப்பானது சிறு துரும்பையும் எரிக்கத் தகுதியாவதில்லையோ, அங்ஙனமே அறியாமை ஐயம் திரிபுகளால் வன்மை குறைந்துள்ள மெய்யுணர்வால் தோற்றம் அறியப்படாது தொடர்ந்து வருகின்ற ஐவகைத் துன்ப வடிவத் தளை அழிவதில்லையாம். அவித்தை, அஸ்மிதை, இராகம், துவேஷம், அபிநிவேசம் என வடமொழியால் ஐவகைத் துன்பவடிவ (பஞ்சக்கிலேச வடிவ)த்தளை (பந்தம்) கூறப்படும். 1. அவித்தை அவித்தையாவது ஆராயுமிடத்துத் தனக்கெனப் பிழம்பில்லாமல் ஒழிவதாம். மூலாவித்தை, தூலாவித்தை என அவித்தையை இரண்டு வகையாகக் கூறுவர். தூய உணர்வுப் பிழம்பை (சுத்த சேதனத்தை) மறைக்கும் அறியாமை அல்லது அஞ்ஞானம் மூலஅவித்தை எனப்படும். குடம் முதலியவற்றோடு கூடிய அறிவுப் பிழம்பை (கடாதி அவச்சின்ன சேதனத்தை) மறைக்கும் அறியாமை அல்லது அஞ்ஞானம் தூல அவித்தை எனப்படும்.

மூல அவித்தையும் காரிய காரண வேறுபட்டால் இரண்டு வகைப்படும். மூடல் (ஆவரணம்), தோற்றம் (விட்சேபம்) என்ற ஆற்றல்களுடன், தோற்றம் அறியப்படாத காலத்திலிருந்து இருப்பு வடிவமாய் இருப்பது (அநாதிபாவ வடிவமாயிருப்பது) காரண அவித்தையாம். ஒன்றில் மற்றொன்றன் புத்தி வடிவத் தோற்றம் காரிய அவித்தையாம். அக்காரிய அவித்தையும், உயிர் அல்லாதவற்றை உயிர் என்று எண்ணும் எண்ணம் (அநாத்மாவில் ஆன்மபுத்தி), நிலையில்லாதவற்றை நிலையுடையன என்று எண்ணும் எண்ணம், (அநித்தியத்தில் நித்திய புத்தி), துன்பம் உடையவற்றை இன்பம் உடையன என்று எண்ணும் எண்ணம் (துக்கத்தில் சுகபுத்தி) தூய்மையற்றவற்றைத் தூய்மை உடையன என்று எண்ணும் எண்ணம் (அசுசியில் தசிபுத்தி) என நால்வகைப் படும்.

2. அஸ்மிதை :- புத்தி உயிர்களின் ஒற்றுமை அறிவு அஸ்மிதை எனப்படும். இது சாமானிய அகங்காரம் எனப்படும்.

3. இராகம் என்பது திட ஆசை அல்லது பேராசையாம்.

4. துவேஷம் என்பது குரோதம் அல்லது வெகுளியாம்.

5. அபிநிவேசம் என்பது சாவச்சமாம்.

கேட்டல் சிந்தித்தல் தெளிதல் :

நீண்டகாலம், மிக்க அன்புடன் கூடிப் பயிற்சி செய்து, கேட்டல் சிந்தித்தல் தெளிதல்களாலே முறையே வீட்டைத் தற்குத் தடையாயுள்ள அறியாமை ஐயந்திரிபுகளை நீக்குதல் வேண்டும். அறியாமை (அஞ்ஞானம்) முதலியவற்றின் இயல்புகளை நாம் அறிதல் தக்கதாகும்.

நான் பெரிய பொருள்(அகம் பிரஹ்மம்)என்னும் நினைவை மறைத்து, யான் பெரிய பொருள் அல்லன் என்னும் நினைவை யுண்டுபண்ணுவது அறியாமை (அஞ்ஞானம்) ஆம்.

நினைவரிய ஒரு பெரிய பொருள் நீயே என்றருளிய நல்லாசான் கூறிய தொடரை உண்மை என நம்பாது. யான் பெரிய பொருளோ (பிரஹ்மமோ) அல்லனோ என்று மனங் கலங்குதல் ஐயமாம்.

நிலையின்றிய உலகத்தை நிலையுடையதென்றும், உயிர் அல்லாத உடலை உயிர் என்றும் கருதும் மயக்கமே திரிபாம் (விபரீதமாம்).

இனிக் கேட்டல் முதலியவற்றின் இயல்பையும் நாம் அறிந்தின்புறல் ஏற்றதாகும்.

கேட்டல்

நீக்கமற நிறைவாயிருக்கிறேன் என்ற எண்ணத்தைப் பெருமொழிப் பொருளின் சிந்தனையால் நிலைபெறச் செய்தலே கேட்டலாம்.

சிந்தித்தல்

கேட்டலுக்கு ஒத்துள்ள உயிர்இறைகளின் ஒற்றுமையை யுக்தியினால் ஆராய்தல் சிந்திக்கலாம்.

தெளிதல்

சித்தம் நீக்கமற நிறைவாய் இருக்கும் தன்னுணர்வு (அநுபவம்) தெளிதலாம்.

நாள்தோறும் இவ்வாறு இம்மூன்றையும் பயிற்சி செய்து வந்தால், அந்த மூன்று தடைகளும் நீங்கப்பெற்றுத் தவறுது வீடடையலாம்.

கேட்டல் எதுவரை

எவ்வளவு காலம் வரையில் கேட்டல் முதலியவற்றைச் செய்தல் வேண்டும்?

எவ்வளவுகாலம் வரையில் அறிவோனும் (அறிவுக்கு அடிப் படையான அந்தக்கரணமும்), (அந்தக்கரணத்தின் விருத்தி வடிவ) அறிவும் இருக்கின்றனவோ, அவ்வளவு காலம் வரையில் (அறியாமைஐயந்திரிபுகளின் பகையான) கேட்டல் முதலிய வற்றைச் செய்தல்வேண்டும். அறிவோன், அறிவு என்னும் வேற்றுமைகள் அற்று உயிரிறைகளின் ஒற்றுமை உணர்விற்குப் புலமான அறிவின்ப மாத்திரமாய் நின்ற பின்னர்க் கேட்டல் முதலிய பயிற்சிகள் தேவையில்லையாகும்.

அறியாமை முதலியன இன்றி அறிவின்ப மாத்திரமாய் எஞ்சி நின்றவர் எவ்வா றிருப்பரென்பதும் அறியத் தக்கதாகும்.

அவர் எப்போதும் வெளிபோல் ஒன்ருேடும் பற்ருது, செய்பவன், நுகர்பவன் முதலிய தளைகள் இறந்து அறிவு வடிவமாயிருப்பர். அங்ஙனம் இருத்தலே, உடலோடு கூடியிருக்கும்போதே விடுதலை பெறுவதாகும் (ஜீவன் முத்தியாம்). மொண்டு கொண்ட வினை அழிவிற்குப் பிறகு (பிராரத்த வினை நாசத்தின் பிறகு) எப்போதும் அவர் உடலை விட்டு வீடடைந்திருப்பர், (விதேகமுத்தி பெற்றிருப்பர்).

இருவகை முத்தி

உடலாதியான உலகம் தோற்றிக்கொண்டிருக்கப் பெரிய பொருளாக நிலைத்திருத்தல் ஜீவன் முத்தி என்றும், பிரார்த்த வினை அழிவால் உடலாதியான உலகததின் தோற்றம் நீங்கப் பெற்று நீக்கமற நிறைவாய் நிற்கும் பெரிய பொருளாக நிலைத்தல் விதேக முத்தி என்றும் கூறலாம்.

7. உடலொடு செத்தவர் (ஜீவன் முத்தர்) இயல்பும் வகையும் மாண்பும்

இருவகை முத்திகள்:

ஜீவன் முத்தரை வடலூர் இராமலிங்க வள்ளலார் 'உடலொடு செத்தவர்' என்று குறிக்கின்றாராகலின் அவ்வாறே ஈண்டு அவர் குறிக்கப்பெற்றனர்.

எப்போதும் வெளி (ஆகாயம்) போல் ஒன்றோடும் பற்றாது, செய்கை, நுகர்கை முதலிய தளைகளிலிருந்து நீங்கி அறிவே வடிவமாகி நிற்பவரே உடலொடு செத்தவர் (ஜீவன் முத்தர்) எனப்பெறுவர்.

உடல் முதலிய உலகம் தோற்றிக்கொண்டிருக்கப் பெரிய பொருட் பிழம்பாகவே (பிரஹ்ம சொரூபமாகவே) நிலைத்தல் உடலொடு சாதல் அல்லது ஜீவன் முத்தியாம்.

நுகர்வினை (பிராரத்தகன்ம) அழிவால் உடல் முதலிய உலகத்தின் தோற்றம் நீங்கப் பெற்றுச் சிறிதும் மறைப்பின்றி நீக்கமற நிறைவான பெரும் பொருட்பிழம்பாக நிலைத்தல் உடலைவிட்டுச் சாதலாம் (விதேகமுத்தியாம்).

“பின்னமிலாச் சருவான்ம சொரூபம் ஆதிப்
பிரிவற்ற பரசாந்த சொரூபம் ஆதித்
துன்னியிடும் பந்தமிலாச் சொரூபம் ஆகித்
தொடர்மோட்சந் தானுமிலாச் சொரூபம் ஆகி
உன்னுமொரு வடிவுமிலாச் சொரூபம் ஆகி
உண்மையுணர் வாநந்த சொரூபம் ஆகி
மன்னுபரி பூரணமாம் பிரம ரூப
மாத்திரமாய் இருப்பவனே விதேக முத்தன்”

என்பது ரிபு கீதை.

சீவன் முத்தரியல்பு

உடலொடு செத்தவர் (ஜீவன் முத்தர்) ஆவார், பெரிய பொருளே (பிரஹ்மமே) வடிவமாக நிலைத்திருப்பர். அவ்வாறு நிலைத்திருத்தலே அவர்தம் இயல்பாகும்.

அவர் நான்கு திறத்தராயிருப்பர், பிரஹ்ம வித்து, பிரஹ்மவித்வரன், பிரஹ்மவித்வரியான், பிரஹ்மவித்வரிஷ்டன் என.

அவர்களுள், பிரஹ்ம வித்தின் மெய்யுணர்வு, நிலையையும் ஏனைய மூவர்தம் ஏற்றத் தாழ்வுகளையும் ஈண்டு உணர்வோமாக.

மனவுறுதி உடையவராய்ப் பெரிய பொருளாம் பிரஹ்மத்தை உணர்ந்த பிரஹ்ம ஞானிகளாகி, ‘யான் யார்? இப்பிறவி எனக்கு ஏன் வந்தது? இது யாரால் நீங்கும்?’ என்னும் கலக்கத்தினின்றும் தெளிந்தவர் உடலொடு செத்தவரெனப்படும் ஜீவன் முத்தராவர்.

அவர்களுள், ஜீவன் முத்தி அடைதற்கு முன்னர் உரிமையாக இருந்த தங்கள் வருணங்களுக்கும் (அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற இனங்களுக்கும்), ஆசிரமங்களுக்கும் (பிரஹ்மசரியம் முதலிய நான்கு நிலைகளுக்கும்) இயைந்த செய்தொழில்கள் மிகப் பெரியனவாயிருப்பினும், அவற்றை ஒரு குறைவுமின்றி அறநூல்களில் கூறியவாறே உலக நன்மைக்காகச் செவ்வையாகச் செய்து தீர்த்த நிலையில் (அறியாமை ஐயந்திரிபுகளின்றி தம் உண்மைப் பிழம்பில்) பிறழாது ஒரு தன்மைத்தாய் இருப்பவரே பிரஹ்மவித் (பெரிய பொருளை உணர்ந்தவர்) எனப் பெறுவர். இவர், பெரும்பான்மையும் இல்லறத்திலிருந்து கொண்டே ஞானிகளாய் (மெய்யுணர்வு உடையவராய்) இருப்பர்.

'நான் மனிதன்', என்றற்றொடக்கத்தனவாய்த் திடமாய் உண்டாகும் உடலே நான் என்னும் உணர்வு போன்று, அந்த உடலே தான் என்ற உணர்வைக்கெடுத்து நான் பெரிய பொருள் என்னும் உணர்வு எவனுக்கு உறுதியாய் உண்டாகின்றதோ அவனே பிரஹ்மவித் என்னும் ஜீவன் முத்தனாவான்.

"காயத்தின் வேறாகத் தன்னைக் கண்டோன்
காயமீ ரினுமறியான் கன்னற் கட்டி
தீயிற்கா யினுமரிந்த போதும் இன்பம்
தீராத் வாறுபோல் தெளிந்த ஞானி
மாயத்தின் மோகத்தால் பேதம் ஆகான்
மணந்தபர புருடன்மேல் மனஞ்சேர் மங்கை
நேயத்தால் மனைத்தொழில்கள் செய்யு மாபோல்
நிகழ்தொழிற்செய் யினும்பரத்தின் நிலைமை நீங்கான்"

என்பது ஞான வாசிட்டம்.

உள்ளத்தின்கண் தடையற்ற இன்பத்தையுடைய அவர், காமம் வெகுளி மயக்கம் என்றற்றொடக்கத்தன ஒரோவழி உள்ளத்தின்கண் எழுமாயினும் அவை முயற்சியின்றியெழும் திட்பமான பற்றின்மை முதலிய துணைகளின் தூய வாசனையால் (பதிவால்) நொடிப் பொழுதிற்குள் அழிந்துவிடுதலின், அவை முளைத்தெழும் பதிவு,உள்ளத்தின்கண் எவ்வாற்றானும் பொருந்தப்பெறார்; தாமரையிலையில் தண்ணீர் கூடியும் அதனொடு பற்றற்று இருப்பதுபோல, உலக நடவடிக்கைகளில் கூடியும் அவற்றொடு பற்றாது வாழ்வார். இவர், தம்மை அறிவிலர் என்று பிறர்க்குக் காட்டினும் காட்டுவர்; தமக்குள்ள அறிவாற்றலைப் பிறர்க்குக் காட்டாது விடினும் விடுவர்;

வாய் திறந்து ஒன்றும் பேசாத மோன விரதம் உடையவரா யிருப்பினும் இருப்பர்; இன்னும் பலதிறத்தராயும் இருப்பர்.

இவர் இவ்வாறு இருப்பதற்கு உரிய அடிப்படை யாது? பற்பல வேறுபாடு உடைய சஞ்சித வினைப்பயனிலிருந்து மொண்டு கொண்ட நுகர்வினைப்பயன், பல வேறுபாடு உடையதாயிருத்தலின், ஒன்றும் அறியாரெனக் காட்டல், அறிவு நிறைவுடையராகக் காட்டாமை முதலிய ஒழுகலாறு களுள் சிறசில, நுகர்வினைப் பயனிற்கேற்றவாறு அவரவர்க்குப் பொருந்துவன பொருந்துகின்றன. அதனால், சீவன்முத்தர் (உயிரொடு செத்தவர்) பெருந்தவத்தைச் செய்யினும் செய்வர்; வணிகத்தொழில் செய்யினும் செய்வர்; நிலத்தை ஆளினும் ஆள்வர்; பிச்சையெடுத்து உண்ணினும் உண்ணுவர்.

சீவன் முத்தருள் வகை 1) பிரம்மவித்து

சீவன்முத்தரான உடலொடு செத்தவர்க்குச் சென்ற காலத்தில் நிகழ்ந்த செயல்கள் குறித்து மனக்கலக்கமோ (சோகமோ), எதிர்காலத்திய பொருள்களின் அடைவுகுறித்து மயக்கவுணர்ச்சியோ (மோகமோ) இன்மையின், அவர், கழிந்த காலத்தில் தம்மிடத்திலிருந்து நீங்கிய பெண், பொன் முதலியவற்றைப்பற்றி எண்ணி வருந்துதலும், எதிர் காலத்தில் கிடைக்கக்கூடிய பொருள் புகழ் முதலியவற்றைப் பற்றி எண்ணி உவத்தலும் செய்யாமல்,நிகழ்காலத்தில் நுகர் வினைப் பயனாகத் தம் கண்ணெதிரே வந்து கிட்டிய உண்டி முதலிய வற்றை நுகர்வர்; ஞாயிற்றின் ஒளிக்கற்றை, திங்களின் ஒளிக் கற்றைபோல் குளிர்ச்சியுடையதாகி ஆலமரத்தின் விழுது போல விண்ணிலிருந்து விழுது விட்டிறங்கினாலும், இறந்த வுடல் மீண்டும் பிழைத்தெழுந்து கொண்டாலும், இனனும் வெவ்வேறு வியத்தகு நிகழ்ச்சிகள் நிகழ்ந்தாலும் அவற்றுள் ஒன்றையும் வியப்பாக நோக்கார்; ஒன்று நன்றாம் என்றும், மற்றொன்று தீதாம் என்றும் கூறார். இவ்வாறு இருத்தலே சான்று மாத்திரையாய் நினைவிறந்து நின்ற இடமென்னும் நடுவுநிலையிலிருக்கும் ஜீவன் முத்தராகிய உடலொடுசெத்தவர் எனப்படும் பிரஹ்ம வித்து என்பவரது செயலாம்.

2) பிரம்மவித்வரன்

பிரஹ்மவித்வரன், பிரஹ்மவித்வரியான், பிரஹ்மவித் வரிட்டன் என்னும் ஏனைய மூவருள், பிரஹ்மவித்வரன், பிரஹ் மவித்வரியான் என்னும் இருவரும் சமாதிசெய்வதில் பொருந்தி யிருப்பர். பிரஹ்மவித்வரிட்டன் என்னும் மற்றவன் சமாதியில் அழுந்தித் தன்னை மறந்திருப்பன்.

இவருள், புறத்தொழில்கள் யாவற்றையும் விட்டு ஒருமுக நிட்டையிலேயிருப்பவனுய் உடல் நிலைத்தற்பொருட்டுத் தானாகவே நிட்டை கலைந்து உணவு கொள்ளக்கருதும் ஜீவன் முத்தன் பிரஹ்மவித்வரனாவன்.

3) பிரம்மஹ்ரவித்வரியான்

புறத்தொழில்கள் ஒன்றும் இன்றி ஒருமுக நிட்டையிலே இருப்பவனாய் மற்றவர் முயற்சியினால் சமாதியினின்றும் விழித்தெழுந்து உணவு கொள்ளும் ஜீவன் முத்தன் பிரஹ்மவித்வரியானாவன்.

4) பிரம்மவித்வரிட்டன்

பிரஹ்மவித்வரனைப்போலத் தன்னாலுணர்தலும், பிரஹ்மவரியானைப் போலப் பிறராலுணர்தலும் இன்றிக் கட்டையும் கல்லும் போன்று எப்போதும் எண்ணம் ஒன்றும் எழுதலின்றித் தான்மாத்திரமாய்ச் சமாதியிலமுந்தி நிற்கும் ஜீவன் முத்தனே பிரஹ்மவித்வரிட்டனாவன். இவன் உணவு கொள்வது சிறுகுழந்தைகள் உறங்கிக் கொண்டே உணவு கொள்வது போன்றிருக்கும்.

பிரம்மவித்து முதலானோர் இயல்புகள்

வித்து, வரன், வரியான், வரிட்டன் எனப்பல வகையினரான சீவன் முத்தர்கட்குச் சீவன் முத்தியின் பத்திலும் விதேக முத்தியிலும் ஏற்றத்தாழ்வு உண்டா இல்லையா என்றுகேட்கலாம்.

அவர்கள் பிராரத்த கன்ம (நுகர்வினை) வசத்தால் பல்வேறு வகைப்பட்ட செயலீடுபாடுகள் உடையவராயினும் உயிரிறை ஒன்றாகும் உணர்வில் (ஜீவப்பரஹ்ம ஐக்கிய ஞானத்தில்) ஏற்றத்தாழ்வு இன்மையின். அதன் பயனான வீடடைதல் அவர்கட்கு ஒரு தன்மைத்தாகவே இருக்கும்.

ஆனால், அந்நால்வருள், பிரஹ்மவித்தானவன், பிராரத்த கன்மவசத்தால் நிகழும்மெய்ந்நூல்களை மாணவர்கட்குப் பாடஞ்சொல்லுதல், மெய்ந்நூல்கள் இயற்றல், உலகம் இன்புறச் சொற்மொழிவாற்றுதல் முதலிய பெரிதாகிய கண்கண்ட துன்பத்தை நுகரா நிற்பன். ஏனைய மூவரும் உலகியல் முதலிய செயலீடு பாடுகள் பெரிதும் இல்லாதவராதலின், பெரும்பான்மையாகச் சீவன் முத்தி விலட்சணுநந்த அனுபவமுடையவராம் வாழாநிற்பர்.

இங்ஙனம் பிரஹ்ம வித்துக்களும், பிறத்தற்கு அடிப்படையான மறைப்பும் (அவித்தை) வேட்கையும் (காமம்), இன்ப

துன்பங்கட்குக் கருவியான இருவினையும் (கர்மம்) உடைய அறிவிலிகள் போல உலகியல் செயல்களில் ஈடுபாடு உடைய வராய் வாழ்ந்திருப்பின் உயிரிறை ஒன்றும் உணர்வாலன்றி வேறொன்றனாலும் கடத்தற்கு அரிய வன்மை பொருந்திய அறியாமை அகன்று மீண்டும் பிறவாதிருத்தற்குஉரிய வழி யாது?

ஐம்பூதங்களுள் காற்று முதலிய நான்கு பூதங்களிலும் அவற்றான் ஆகிய பொருள்களிலும் (காரியங்களிலும்) பரவி யுள்ள விண் (ஆகாயம்) ஆகிய பூதம் அவற்றுள் ஒன்றிலும் கொள்ளாது இருத்தல் போன்று பெரிய பொருளை உணர்ந்த அறிவர்கள் (பிரஹ்மஞானிகள்), "நீக்கமற நிறைந்து நிற்கும் என்னிடமிருந்து உலகங்கள் தோன்றும்" என்னும் ஒழுங்குபட்ட உறுதியான எண்ணத்துடன் ஒன்றனோடும் தொடர்பு கொள்ளாதிருத்தலினால் அவர்களது ஒழுகலாறுகள் உண்மையில் ஒழுகலாறுகனாதல் இல்லை. அங்ஙனம் ஆதலால், அவர்கள் பிறத்தற்கு அடிப்படை ஏற்படாது. ஏனைய காற்று முதலிய நான்கு பூதங்களும் நம்மொடு கலவா நிற்கும் பொருள் களொடு தொடர்புற்றிருத்தல் போன்று அறிவிலிகள் இருவினை வயத்தால் தம்மையடையும் மனைவி மக்கள் பொருள்கள் இவற்றெடு கூடி அறியாமை இச்சை செயல்கள் உடையவராய் இன்ப துன்பங்களால் தாக்குண்டு நிற்பர். இவ்வாறிருத்தலே விடுதலை பெற்றவனுக்கும் கட்டுற்றவனுக் கும் உள்ள வேறுபாடாகும்.

இப்படிப்பட்ட உடலொடு செத்தவர்களை (ஜீவன் முத்தர்களை) வழிபட்டோர் அரன் அயன் அரி என்னும் முப்பெருந்தேவர்களும் மகிழுமாறு விரதங்கள் எல்லாவற்றை யும் குறைவறச் செய்து பிறப்பின் தூய்மையுடையவர் ஆயினார் என்று மறை கூறுகின்றது. ஆதலால் அவர்களுடைய பெருமை அளவிடற்கரியதாகும்.

சீவன் முத்தரும்-மூவினையுடல்களும்

இனி ஓர் ஐயப்பாடு எழலாம். உடலொடு செத்தவர்கள் சஞ்சிதம், ஆகாமியம், பிராரத்தம் என்னும் மூவினையும், பருவுடல், நுண்ணுடல், கருவுடல், என்னும் மூவுடலும் நீங்கப் பெற்றாலன்றோ வீடடைதல் என்பது கூடும்? அவை நீங்கப் பெறுமாறு யாங்ஙனம்?

பருத்திப் பஞ்சுப்பொதியினை ஊழித்தீ அடைந்தால், எங்ஙனம் அதை மிக எளிதாக எரித்துச் சாம்பராக்கிவிடுமோ,

அங்ஙனமே, பலவகைப் பிறப்புக்கள் உண்டாவதற்குப் பலவகை வித்துக்களாயுள்ள சஞ்சித வினைகள் (இப்பிறப்பில் நுகர்தற்கென மொண்டு கொண்ட வினைகள் ஒழிய எஞ்சி நின்ற பழவினைகள்) முழுதும், உயிரிறை ஒன்றாகும் ஜீவப்பிரஹ்ம ஐக்கிய ஞானம் என்னும் மெய்யுணர்வாகிய தீ அடைதலால் மிக எளிதாக எரித்துச் சாம்பராக்கப்படும். (மெய்யுணர்வால் அறியாமையின் மறைப்பாற்றல் கெடுகின்றபோது அதன்கண் உள்ள சஞ்சித வினையும் கெடுகின்றது. அதனால், சஞ்சித வினையின் பலன் அறிவர்க்கு ஏற்படுவதில்லை.) அறிவர்க்கு (ஞானிகட்கு) உயிரின்கண் நாம் வினைமுதல்வர் என்றற்றொடக்கத்து மயக்கம் இன்றாகலின் ஆகாமிய வினை அவரை அடைதல் இல்லை.

இப்பிறப்பிற்கு என கொண்ட வினையாகிய பிராரத்தம் இப்பிறப்பில் நுகர்தலால் தொலையும்.

இராப்பகல்போல் மாறிமாறி வரும் இன்பதுன்பங்களை ஒப்பக் காண்டலால், உடலொடு செத்தவரான ஜீவன் முத்தர் பொறுமையாக இருந்து பிராரத்த வினையின் பயனாகிய இன்ப துன்பங்களைத் துய்க்குங்காலத்தில் செய்யும் நல்வினை தீவினைகள் மறுமையில் தொடராது நசிக்கும் வழி யாது என்ற ஐயம் இப்போது ஏற்படுதல் இயல்பேயாகும். அவ்வையத்தைப் போக்குவது ஈண்டு இயைபுடைத்தாகும்.

உடலொடு செத்தவரெனப்படும் ஜீவன் முத்தர் செய்த தீவினையை அறிவீனர் அவர்களை இகழ்தலால் தாம் கொள்ளுகின்றனர். அறிவுடையார் அவர்களைச் சிவப்பிழம்பாகவே கொண்டு பூசித்து அவர்களுடைய நல்வினையையெல்லாம் கொள்கின்றனர். அங்ஙனம் கொள்ளுதலால் பிராரத்தவினை நுகர்ச்சி காலத்தில் ஏற்படும் அவர்களுடைய ஆகாமிய வினை அவர்களைத் தொடராமல் நசித்துவிடுகின்றது.

இனி அவர்களுடைய மூவுடல்களும் எவ்வாறு நீங்குவன என்பது குறித்து நோக்குவோம்.

உடலொடு செத்தவருடைய அவித்தை என்னும் கருவுடல், பெறுவதற்கு அருமையான மெய்யுணர்வால் கெடுகின்றது. பருவுடலோ, அதற்கு வரையறுக்கப்பட்ட காலத்தில் (பிராரத்த வினை நுகர்ச்சி முடிவில்) பிணவடிவமாகின்றது. அவ்வாறு பருவுடல் பிணவடிமமாகின்றபோது, நுண்ணுடல் கொல்லன் உலைபிற்காய்ந்த இரும்புண்ட நீர் போலத் துரியமாயும்

(நான்காவதாயும்) யாண்டும் நீக்கமற நிறைவாய் உள்ளதாயு முள்ள உயிர்ப்பிழம்பில் (ஆன்ம சொரூபத்தில்)

ஜீவன் முக்தனாகிய ஞானியின் (அறிவனின்) பருவுடல் பிண வடிவமாய் விழுகின்ற காலத்தில் அவனது நுண்ணுடல் அறிவிலியின் (அஞ்ஞானியின்) நுண்ணுடல் போன்று வேறுலகத்திற்காவது இவ்வுலகத்தின் வேறு உடலிலாவது போகாமல் காய்ச்சிய இரும்பில் வெளிக்த நீர், பிழம்பின்றி (சொரூபமின்றி)க் கெடுவதுபோல, உயிர்ப்பிழம்பில் (ஆன்ம சொரூபத்தில்) ஒன்றியொடுங்கிக் கெடுகின்றது என்பது ஈண்டு அறிதற்பாலதாம்.

நுண்ணுடல், திரிபுபடாத வடிவுடைய பெரிய பொருளில் (நிர்விகார வடிவப்பிரஹ்மத்தில்) ஒன்றியொடுங்குதல் நிகழாமையின், பிருதிவியின் (மண்ணின்) காரியமான இரும்பில் நீர்த்துளி ஒன்றியொடுங்காது அதனொடு கூடிய நெருப்பில் ஒன்றியொடுங்குவது போல, நுண்ணுடல் தூய அறிவுப் பிழம்பில் (சுத்தசேதனத்தில்) ஒன்றி ஒடுங்காது அதனொடு கற்பிதமாகக் கூடியுள்ள அவித்தையில் ஒன்றியொடுங்குகின்ற தென்று கொள்ள வேண்டும். ஈண்டு ஆதேயத்தில் (இடத்து நிகழ்பொருளில்) ஒன்றியொடுங்கும் நுண்ணுடலை ஆதாரத்தில் (இடத்தில்) ஒன்றியொடுங்குவதாகக் கொள்வது உபசார வழக்காகும்.

பருவுடல் நீக்கிய சீவன் முத்தர்

ஜீவன் முத்தர்க்குப் பருவுடல் நீங்கிய பின்னர் உண்டாகும் நிலைமை யாதென்பது ஈண்டு அறிய விழைவுண்டாகும். கடம் (தாழி) என்ற உபாதி நீங்கிய பின்னர்த் தங்கு தடையின்றிக் கடாகாசம் (தாழிவிண்) மகாகாசத்தோடு (பெருவிண்ணொடு) ஒன்றானாற்போல மூவுடலென்னும் உபாதி நீங்கிய பின்னர்த் தங்கு தடையின்றிச் சீவன் முத்தர் முதலிடையிறுதியற்று உள் வெளியின்றி எப்போதும் தாமிருந்தபடியே விளங்கும் விதேக முத்திப் பதத்தை யடைந்திருப்பர்.

(கடோபாதி நீங்கியவிடத்துக் கடாகாசம் மகாகாசத்தோடு ஒன்றாவது போல மூவுடலுபாதி நீங்கியவிடத்துச் சீவன்முத்தர் பிரஹ்மத்தோடு ஏகமாய் அஃதாவது பிரஹ்ம மாத்திரமாகவே விளங்குகின்றனர். அப்போது அவர் விதேக முத்தர் எனப் படுகின்றனர். விதேகம்-தேகமின்மை; உடலின்மை; உடலென்ற எண்ணம் இன்மை).

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1. Tamil Literature — உரூ. 85/—
   —Prof. M. S. Purnalingam Pillai — U.S.$ 17

2. மொழி நூல்
   —மாகறல் கார்த்திகேய முதலியார் — உரூ. 75—

3. Tamil University Machine Translation System (TUMTS) — Rs. 75/— U.S.$ 15
   Co-authors : K. C. Chellamuthu K. Rangan
   K. Murugesan

4. A Study on the Thanjavur Art Plate — Rs. 60/—
   —Prof. P. Saravanavel — U,S.$ 12

5. நாமதீப நிகண்டு — உரூ. 68—
   —கல்லிடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்

6. மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் — உரூ. 45/—
   —பேரா. கா. சுப்ரமணியப் பிள்ளை

7. Indians in South Africa — Rs. 60/—
   —Prof. K. Nambi Arooran — U.S.$ 12

விற்பனைக் கழிவு: அஞ்சல் வழி 25°/.
நேரில் 30°/.
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40°/.
விற்பனையாளர்களுக்குப் பெரும்படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

கரந்தைத் தமிழ்ச் சங்கவெளியீடுகள்

யாழ் நூல் — விபுலானந்த அடிகள்	ரூ.	50 00
கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்)	ரூ.	30 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60 00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ்	ரூ.	6 00
கபிலர் – நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	4 00
நக்கீரர் – நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3 00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு – பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2 00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1 00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0 62
சிவமும் செந்தமிழும்–பாவலர் ச. பாலசுந்தரம்	ரூ.	0 25

பிற வெளியீடுகள் :

கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்) பேராசிரியர் ச. பாலசுந்தரம்		7 50
கலைக்கூத்தன் கவிதைகள்	ரூ.	6 00

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி. நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்–613002.

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர். க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ. பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம்.லிட், பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர். பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம். ஃபில்.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம்.ஃபில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர்
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

Regd. No. TN/TJ/17.

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு ....

6. ஆசிரியர்,
தஞ்சை சரபோசி மன்னர்
சரஸ்வதி மகால் நூல்
நிலைய இதழ்,
அரண்மனை, தஞ்சாவூர்.

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	25 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.